# அரங்கம் செய்திகள்

தமிழ் மக்களுக்கான ஒரு தொடர்பூடகம்

வார இதழ் – இலவசம்

வெள்ளி, மார்ச் 08, 2019. இதழ் - 54








**மட்டக்களப்பு: வக்கிக் கரத்தை முதல் ஓட்டோ ரிக்ஷா வரை!**

பக்கம் - 07



**இழந்த தேசியக்கொடியை தேடிய கதை!**

பென்னட் "இலங்கையும் அதன் செயல்திறனும்"


பக்கம் - 05



**உலக மகளிர் தினம்!**

கலவையான உணர்வுடனேயே இதனை வரவேற்க முடிகிறது.

பக்கம் -03



**சர்வதேச பெண்கள் தினம் : 'கிராமப் பெண்களே விழித்தெழுங்கள்'**

பக்கம் - 03



# 'அப்பா எப்பம்மா வருவார்' --- 'எனது கணவர் எங்கே?

## --- மகளிர் தினத்தில் சர்வதேசத்தை நோக்கி ஒலிக்கும் மட்டக்களப்புக் குரல்கள்!

-- நிலவன் ---

'அப்பா எப்பம்மா வருவார்" என்று எங்கள் பிள்ளைகள் கேட்கிறார்கள் தாய்மாரும் எவ்வளவு காலத்திற்கு பிள்ளைகளை ஏமாற்றுவது எனது கணவர் வருவார் என நான் 20 வருடங்களுக்கு மேலாக நம்பிக்கொண்டு இருக்கிறேன்' என்று கிழக்கு மாகாண வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட குடும்பங்களின் மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் அ.அமலநாயகி "அரங்கத்திடம்" தெரிவித்தார்.

தொடர்ச்சி... (பக்கம் -06 )

# வரவுசெலவுத் திட்டத்தை தோற்கடித்து ஆட்சியைக் கைப்பற்றுவோம் என்று தினேஸ் சவால்

--- நி.அமிர்தலஸன் ---

ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் சமர்ப்பித்துள்ள நடப்பு நிதியாண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை தோற்டித்து, ஆட்சியைக் கைப்பற்றவுள்ளதாக மகிந்த ராஜபக்ச தரப்பு உறுப்பினர், முன்னாள் அமைச்சர் தினேஸ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பு-07 இல் உள்ள இலங்கை மன்றக் கல்லூரியில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் விளக்கமளித்த அவர், இந்த அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டத்தை கடுமையாக விமர்சித்தார்.

இலங்கையின் வடபகுதியில்

தொடர்ச்சி... (பக்கம் -02 )


TRANSPARENCY INTERNATIONAL SRI LANKA
a nation that upholds integrity

நேர்மையின் புகலிடம்

இல: 5/1, எல்பேங்க் வீதி, கொழும்பு – 05

Email: help@tisrilanka.org Web: www.tisrilanka.org

ஊழலை ஒழிப்போம்!
அதற்கு எதிராக குரல்கொடுப்போம்
தமிழிலும் இலவச சட்ட ஆலோசனை பெற

யாழ்ப்பாணம் - 041 22 33 522 - வவுனியா - 024 222 76 76

அழையுங்கள்
011 2 501 503



உங்களின் வாழ்வை மேம்படுத்த நான்கு இறக்கைகள்...

FCC SUPER MALL
4 Wings for Uplift Your life

ஒரே கூரையின் கீழ் வாழ்வின் அத்தியாவசிய பொருட் தேவையை பூர்த்தி செய்ய அன்புடன் வரவேற்கின்றோம்.

PHARMACY – TIP TOP HEALTH CARE
SUPER MARKET – CITY CENTRE
BUDGET SHOP – CASH & CARRY – Young Forever
CAFETERIA – FCC Cafe

மிகவிரைவில் மட்டுநகர் மத்தியில் நீங்கள் வெகுநாளாக காத்திருந்த சேவை ஆரம்பிக்கவுள்ளது என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்

* 40-50 பேர்வரை அமரக்கூடிய வசதி
* சுத்தமான சூழல்
* குளிரூட்டப்பட்ட அழகான சூழல்
* சுத்தம் சுகாதாரமாகத் தயாரிக்கப்பட்ட உணவுகள்
* பார்க்கிங் வசதி



* Birthday Party
* Meetings
* Workshops
* Seminars
* And other Family / Friend's Functions

இல.24/1, மத்திய வீதி, மட்டக்களப்பு. TP: 0652222722, Hotline: 0772072722 www.fourams.com

## மட்/இந்துக் கல்லூரி முதலிடம



கடந்த 04.03.2019இல் சிவராத்திரியை முன்னிட்டு மட்டக்களப்பு பிரம்மகுமாரிகள் இராஜயோக நிலையத்தினர் பாடசாலை மாணவர்களுக்கு விவாதப் போட்டி ஒன்றினை நடத்தினர். இதில் மட்/ இந்துக் கல்லூரி முதலாவது இடத்தையும் மட்/ சிவாநந்த வித்தியாலயம் இரண்டாவது இடத்தையும் பெற்றன. முதலாவது இடத்தைப் பெற்ற மட்/ இந்துக் கல்லூரி மாணவர்களுக்கு மட்டக்களப்பு மாநரக கௌரவ முதல்வர் திரு.தி. சரவணபவன் அவர்களும் இரண்டாவது இடத்தைப் பெற்ற மட்/ சிவாநந்த வித்தியாலய மாணவர்களுக்கு ஓய்வு பெற்ற மட்டக்களப்பு வலயக் கல்விப் பணிப்பாளர் திரு.க.பாஸ்கரன் அவர்களும் பரிசில்களை வழங்கிக் கௌரவித்தனர்.

மேலும், இவ்விவாதப் போட்டிக்கு நடுவர்களாகக் கடமைபுரிந்த திருமதி கே. சண்முகநாதன், திரு.த.யுவராஜன், திரு.எஸ்.சிவநிதி ஆகியோர்க்கும் இப்பாடசாலைகளது ஆசிரியர்களுக்கும் மட்டக்களப்பு பிரம்மகுமாரிகள் இராஜயோக நிலையத்தில் இறைபணி புரியும் ஜெயந்தி அம்மையார் அவர்கள் அன்பளிப்புக்களை வழங்கிவைத்தார்கள்.

## மலையக மைந்தனுக்கு மட்டு நகரில் வரவேற்பு

மலையக தோட்ட தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபாய் சம்பள உயர்வு வேண்டி துவிச்சக்கர வண்டிப் பயணம் மேற்கொண்டு வவுனியாவில் இருந்து நாடுபூராவும் சுற்றி வரும் சைக்கிள் அகிம்சைப்போராளி, திரு.பிரதாபன் அவர்கள் மட்டு நகரை வந்தடைந்த போது மட்டு இளைஞர்களால் இரவு தங்கவைக்கப்பட்டு முதலாம் திகதி பல இடங்களிலும் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

கல்லடி பாலத்தடியில் இடம்பெற்ற வரவேற்பு நிகழ்வில் மட்டு இளைஞர்களுடன் மட்டு மேயர் திரு. தி.சரவணபவன், பிரதி மேயர் திரு. சத்தியசீலன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. பா.அரியநேந்திரன் ஆகியோரும் கலந்து கொண்டு உற்சாகமூட்டினர்.

திரு.பிரதாபன் ஏலவே இலங்கையில் 60 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் ஓய்வூதியம் வழங்கப்பட வேண்டும் என்று 2017 சித்திரை மாதம் கரையோரப் பிரதேசங்களை சுற்றி வந்து அனைவரினதும் கவனத்தையும் ஈர்த்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## கொக்கட்டிச்சோலை மணற்பிட்டி வீதியோரங்களில் வீசப்படும் கழிவுகள்



(படுவான் பாலகன்)
மண்முனை தென்மேற்கு பிரதேசசபை எல்லைக்குட்பட்ட கொக்கட்டிச்சோலை – மணற்பிட்டி வீதியோரங்களில் குப்பைகள் வீசப்படுவதனால் அசௌகரியங்களை எதிர்கொள்வதாக பயணிகள் தெரிவிக்கின்றனர். குறித்த வீதியில், இரவுநேரங்களில் இனந்தெரியாதோரால் குப்பைகள் வீசப்படுவதாகவும் மக்கள் குறிப்பிடுகின்றனர்.

கடந்த மாதமளவில், குறித்த வீதியின் ஓரங்களில் குப்பைகள் வீசப்பட்டு வந்தநிலையில், பிரதேசசபையினால் அந்த இடம் துப்பரவு செய்யப்பட்டது. இந்நிலையில் மீண்டும் அப்பகுதியில் குப்பைகள் கொட்டப்பட்டு வருகின்றன. இதனால் வீதியில் செல்லும்போது துர்நாற்றம் வீசுவதாகவும், அந்தப் பகுதியில் குப்பைகொட்டுபவர்களுக்கு எதிராக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

## சிவராத்திரியில் கௌரவிப்பு



சைவ சமய பாரம்பரியங்கள் பாதுகாக்கப்பட வேண்டும் சைவ சமய புராணக் கதைகள் எதிர்கால சந்ததியினருக்கு தெரியப்படுத்தப்பட வேண்டும் என்னும் எண்ணப்பாங்கோடு. மட்டக்களப்பு வந்தாறுமூலை அம்பலத்தடி ஸ்ரீ நிர்முகப் பிள்ளையார் ஆலயத்தில் மகா சிவராத்திரி நிகழ்வு இடம்பெற்றது.

இவ் நிகழ்வானது, வந்தாறுமூலை இளம் சைவ மன்றத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் ந.பிரதீபன் தலைமையில் ஆலய முன்றலில் மகா சிவராத்திரியின் கதை நிகழ்வினை சித்திரிக்கின்ற வகையிலான அமைவினை கொண்ட சிவலிங்க வடிவம் புலி மரத்தின் மேல் இருக்கும் வேடனை பார்த்துக்கொண்டு இருப்பது போன்ற அமைவிடத்தினையும் அமைத்து பல்வேறுபட்ட கலை நிகழ்வுகள் நடைபெற்றன. சமய சொற்பொழிவுகள், சைவ சமயத்தினை கோட்பாடுகளை பின்பற்றும் சைவ அடியார்களுக்கு கௌரவிப்பு நிகழ்வும் நடந்தன. பிரதேசத்தின் ஊடகவியலாளர் லெட்சுமணன் தேவப்பிரதீபன் மற்றும் சைவப் பணிக்காக திருமதி குசலாதேவி கந்தசாமியும் நினைவுச் சின்னங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

நிகழ்வில் ஸ்ரீ நிர்முகப் பிள்ளையார் ஆலய பூசகர் சிவ ஸ்ரீ ஜெயம்பலம் குருக்கள், அதிபர் s.சண்முகதாஸ் ஆகியோர் கலந்து சிறப்பித்திருந்தனர்.

## மட்டு. உறுகாமம் பிரிவு நீர்பாசன திட்டத்தின் 8698 ஏக்கரில் சிறுபோகச் நெற்செய்கை



மட்டக்களப்பு மாவட்டத்தில் உறுகாமம் பிரிவு நீர்பாசன திட்டத்தின் கீழ் இம்முறை 7828 ஏக்கரிலும் சிறிய நீர்ப்பாசன குளங்களின் நீர்ப்பாசன வசதியுடன் 870 ஏக்கரிலுமாக மொத்தம் 8698 ஏக்கரில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

உறுகாமம் நீர்ப்பாசன திட்ட சிறுபோகச் செய்கை ஆரம்பக்கூட்டம் வெள்ளிக்கிழமை (01) மாலை ஏறாவூர்ப் பற்று பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுதர்சினி சிறிகாந் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பிரதேச செயலாளர் ந.வில்வரெட்ணம், மாவட்ட விவசாயப்பணிப்பாளர் வை.பி.இக்பால், விவசாய பணிப்பாளர் (விரிவாக்கம்) வி.பேரின்பராஜா, கமநல சேவைகள் மாவட்ட உதவிப்பணிப்பாளர், நீர்ப்பாசனப் பணிப்பாளர் (மத்தி) பொறியியலாளர் எஸ்.எம்.பி.எம். அஸார், நீர்ப்பாசனப்பணிப்பாளர் (மாகாணம்), நீர்ப்பாசன விவசாய, கமநல, திணைக்களங்களின் பிரதிநிதிகள் விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

உறுகாமம் பிரிவு நீர்பாசன திட்டத்தின் கீழ் பாலகன் வெளி கண்டம் 850 ஏக்கர், கூமாச்சோலை கண்டம் 805 ஏக்கர், சமுளங்குடா கயிறுவெளி கண்டம் 565 ஏக்கர், மயிலவட்டுவான் மாங்களமடு கண்டம் 550 ஏக்கர், நேரங்குடா தம்பானம்வெளி கண்டம் 390 ஏக்கர்,

தொடர்ச்சி... (பக்கம் -15 )

தொடர்ச்சி...

## வரவுசெலவுத் திட்டத்தை தோற்கடித்து ஆட்சியைக் கைப்பற்றுவோம் என்று தினேஸ் சவால்


மாத்திரமல்ல ஏனைய மாகாணங்களிலும் நுண்கடன் திட்டத்தால் சாதாரண மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆனால் வட மாகாணத்திற்கு மாத்திரம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இழப்பீடு வழங்க அரசாங்கம் தீர்மானித்திருந்தது.

எனினும் சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் நுண்கடன் திட்டத்தால் பாதிக்கப்பட்ட வடமாகாண மக்களுக்கு முறையான திட்டங்கள் எதுவும் இல்லை என தினேஸ் குணவர்த்தன சுட்டிக்காட்டினார்.

ஆகவே மக்களை அரசாங்கம் ஏமாற்றுகின்றது. நடப்பு ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் அரசாங்கத்தின் பற்றாக்குறை கூடுதலாகவுள்ளது. சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவித் திட்டங்களும் உரிய முறையில் கிடைக்கவில்லை. அந்த நிதி மீண்டும் கிடைக்கும் என நிதியமைச்சர் மங்கள சமரவீர முன்னர் கூறியிருந்தார்.

ஆனால் சர்வதேச நாயண நிதியத்தின் நிதியுதவி கிடைத்தமை பற்றிய எந்தவொரு தகவலும் வரவு செலவுத் திட்டத்தில் இல்லை என்றும் தினேஸ் குணவர்த்தன கூறியுள்ளார்.

அதேவேளை, நடப்பு நிதியாண்டுக்கான வரவு செலவுத் திட்டம், ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தின் கனவு மாளிகை என ஜே.வி.பி. குற்றம் சுமத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.



KODDAIMUNAI Sports Club
1972
Web Site G-Mail Face Book Regd No. BATTICALOA

அறிவித்தல்

எமது கழகத்தின் தலைவர் மற்றும் நம்பிக்கையாளர் சபை இத்தால் பொதுமக்களுக்கு அறிவிப்பதாவது, எமது கழகத்தின் பெயராகிய "கோட்டமுனை விளையாட்டுக்கழகம் மேலே குறிப்பிடப்பட்டுள்ள இலச்சனை" மற்றும் விருது வாக்கியம் என்பனவற்றை எமது கழகத் தலைவரின் எழுத்து மூல அனுமதியின்றி தனி நபராலே அல்லது யாதேனும் குழுவினராலே பாவிப்பது சட்டவிரோதமான செயலாகவும் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படக்கூடிய விடயமாகும் என்பதை தெரிவித்துக்கொள்கிறோம்.

நன்றி

தலைவர், நம்பிக்கையாளர் சபை,
கோட்டைமுனை விளையாட்டு கழகம்
மட்டக்களப்பு

BOARD OF TRUSTEE
Mr. E. Sivanathan Mr. S. Ranjan Mr. V. Karthik Mr. P. Vaseeharan Mr. S. Kasipillai
PATRONS
Mr. M. Uthayakumar Government Agent
Mr. Vinoba Indran Attorney at Law
Do Sports to be fit
PRESIDENT Mr.P.Sadatcharajah #25, 1st Cross, Gnanasooriyam Square, Batticaloa. +94 71 9702494
SECRETARY Mr.B.Jeyathasan #19, 7th Cross, Kallady Veloor, Batticaloa. +94 77 1820878
TREASURER Mr.K.Thayasingam # 45, Sinna Uppodai Road, Batticaloa. +94 77 4710308



## உலக மகளிர் தினம்!

மகளிர் தினம் இது.

கலவையான உணர்வுடனேயே இதனை வரவேற்க முடிகிறது. எனது தாய்; இந்தப் பத்திரிகையின் பெயர் அவருடையது. அழகான, துணிச்சலான பெண் அவர். திமிருடன் முடிந்தவரை வாழ்ந்துவிட்டுப் போனவர். எனக்கு வரும் பேத்திக்கும் அந்தத் திமிர் இருக்க வேண்டும் என்று நினைக்கிறேன்.

எனது சகோதரிகள், மனைவி எனது தாயைப் பின்பற்ற வேண்டும். அவர்கள் ஊடாக மகளிர் தினத்தை நான் எதிர்கொள்கிறேன்.

அடுத்ததாக, போர் கடந்துபோன இந்த மண்ணில் அதனைத்தாண்டி இன்றும் தமது குடும்பத்தின் முதுகெலும்பாய், சிலவேளைகளில் தனியாக குடும்பத்தை சுமந்து நிற்கும் பெண்களுக்கு தலைவணங்குகிறேன். இவர்கள் எல்லோரின் நிலைமையும் நன்றாக இருக்கிறது என்று சொல்லிவிட்டுப் போக என்னால் முடியவில்லை.

போர் முடிந்து பத்து வருடங்களின் பின்னரும் அவர்கள் போராடுகிறார்கள். தன்னை யார் என்று தெளிவாக அடையாளப்படுத்திக்கொள்ள முடியாமல் போராடுகிறார்கள். இவர்களை இந்த நிலையில் வைத்ததற்காக நான் எம்மவரோடு சேர்ந்து தலைகுனிகிறேன். போர் முடிந்து பத்து வருடங்களின் பின்னரும் பெண்களை பயத்தில் வைத்திருப்பது எமது சமூகத்துக்குப் பெருமையல்ல.

தனது தந்தை எங்கே என்று கேட்கும் குழந்தைக்கு பதில் சொல்ல முடியாமல் தவிக்கின்ற, “உறவுகளை, கணவரை காணாமல் தேடுகின்ற” பெண்களின் வலிகளையும் இந்த மகளிர் தினத்தில் தவிர்த்துவிட்டுப் போக முடியாது. தான் தேடும் தனது உறவு கணவரோ, மகனோ அல்லது சகோதரனோ, அவர் எங்கு இருக்கிறார், உயிரோடு இருக்கிறாரா என்று கடந்த பல தசாப்தங்களாக தேடியலையும் இந்தப் பெண்களுக்கு எந்தவிதமான பதிலையும் சொல்ல முடியாமல், நாம் நாட்களைக் கடத்திக்கொண்டிருக்கிறோம். இது நாம் தலைகுனிய வேண்டிய இன்னுமொரு விடயம். பொருளாதாரத்தில் நலிந்துபோய், குடும்பத்தின் தலைமையையும் இழந்து, தாமே அதனைப் பொறுபேற்று, அடுத்த நாளுக்கு என்ன வழி என்று தேடும் சகோதரிகளுக்கும் இந்த மகளிர் தினம் உரியது.

இத்தனை சோகங்கள் இருந்தாலும் இவற்றையும் கடந்து மகளிர் தினத்தை அனுட்டிக்க வேண்டியது எமது கடமை.

பெண்ணை முதன்மைப்படுத்திய பண்பாடு கிழக்கு மாகாணத்துக்கு உரியது. அவளே எங்கள் தெய்வம், தலைவி என்று நாம் கொண்டாடி வந்திருக்கின்றோம் இங்கு. அந்த நிலையை மீளச்செய்ய நாம் உழைக்க வேண்டும். அனைத்துப் பெண்களும் அதற்கு முன்வரவேண்டும்.

பெண்களை முன்னிலைப்படுத்திப் பார்ப்போம். அவர்களை, அவர்களது வெற்றியை எமது அடையாளமாக்குவோம். அதற்கான அரங்கத்தின் ஒரு சிறிய, மிகச்சிறிய முயற்சிதான், இங்கு போரினால், பாதிக்கப்பட்ட, பொருளாதாரத்தில் பிந்தங்கிய படுவான்கரையைச் சேர்ந்த இரு கால்பந்து அணிகளுக்கு அனுசரணை வழங்கும் எமது திட்டம். அவர்களின் வெற்றியின் மூலம் நாம் பெருமையடைவோம்.

அம்பிளாந்துறை மற்றும் பன்சேனையை சேர்ந்த இந்தப் பெண்கள் கால்பந்திலும் விளையாட்டுத்துறையிலும் மிகச்சிறப்பான திறமைகளைக் கொண்டவர்கள். எழுவான்கரையில் இருக்கும் பல முன்னணி பாடசாலைகளின் மாணவிகளைவிட கால்பந்தில் திறமைவாய்ந்தவர்கள். இவர்களின் எதிர்கால வெற்றியில் நாமும் கைகோர்ப்போம். இது எமக்கு சிறிய ஆறுதலையாவது தரட்டும்.

அனைத்துப் பெண்களுக்கும் மகளிர் தின வாழ்த்துகள்!

அன்புடன்
**சீவகன் பூபாலரட்ணம்**

## சர்வதேச பெண்கள் தினம் : ’கிராமப் பெண்களே விழித்தெழுங்கள்’

பேராசிரியர் செ.யோகராசா

பெண்கள் முன்னேற்றம், பெண்கள் உரிமை தொடர்பான சிரத்தை சென்ற நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஈழத்தில் முகிழ்த்த வேளையில் யாழ்ப்பாணத்தில் இருந்து 'மங்களம்மாள் மாசிலாமணி'யின் குரல் ஓங்கி ஒலித்தது. அன்னார் 1902இல் 'பெண்கள் சேவா சங்கம்' என்றொரு சங்கத்தை ஆரம்பித்தார். தமிழ் மகள்(1923) என்றொரு மாத இதழையும் தொடங்கி, நடத்தி வந்தார். சிறந்த சொற்பொழிவாளராகவும் கட்டுரையாளராகவும் திகழ்ந்தார்.

திருகோணமலையில் 1919இல் 'மாதர் ஐக்கிய சங்கம்' நிறுவப்படவும் தொடர்ந்து செயற்படவும் வழிவகுத்ததோடு, 'மாதர்மதிமாலிகை'(1927) என்றொரு சஞ்சிகை வெளிவரவும் காரணமாக விளங்கியவர் ஸ்ரீமதி.சு.தையல் நாயகி. மலைநாட்டில் அவ்வழி செயற்பட்டவர் மீனாட்சியம்மாள் நடேசய்யர். மட்டக்களப்பில் பெண்கள் முன்னேற்றம் குறித்த சிரத்தை எப்போது ஏற்பட்டது என்று தேடிய வேளையில், 1948இல் மண்டூரில் இருந்து வெளிவந்து, சில வருடங்களின் முன்னர்(இக்கட்டுரையாளரால்) வெளிக்கொணரப்பட்ட 'பாரதி' சஞ்சிகையில் சில சான்றுகளை இனங்காணக்கூடியதாக இருந்தது.

சமகாலத்தில் வெளியான மறுமலர்ச்சி, பாரதி(கொழும்பு) ஆகிய சஞ்சிகைகளுடன் ஒப்பிடும் போது பெண்களின் ஆக்கங்கள் அதிகளவு இடம்பெற்றிருந்த (மண்டூர்) பாரதி இதழ்களில் பெண்கள் எழுதிய கவிதை, சிறுகதைகளை விட கட்டுரைகள் கவனத்தை ஈர்ததுள்ளன. செல்வி தேவகி, செல்வி நாகேஸ்வரி ஆகியோர் எழுதிய கட்டுரைகளே அத்தகையனவாம். அவ்விதத்தில் செல்வி தேவகி எழுதிய கட்டுரை மிக முக்கியமானது. 'கிராமப் பெண்களே , விழித்தெழுங்கள்' என்பதே அக்கட்டுரையாகும்.

'சகோதரிகளே!' 'செல்வப் பெண்மணிகளே' என்றவாறு ஆரம்பித்து சில விடயங்கள் கூறி பின்னர் செல்விகளே என்று தொடங்கி அவர் கூறும் விடயங்கள் கவனத்திற்குரியவை:



'இனியாவது விழித்தெழுங்கள்! கிராமப் பெண்கள் மேன்மையடையப் பிரயாசைப்படுங்கள். வீட்டுக் குள்ளேயிருக்கும் பெண்களை வெளியேற்றுங்கள். வாழ்க்கைக்குத் தேவையான கல்வியைக் கற்றுத் தேறுங்கள். அடுப்பூதும் பெண்களுக்கு என்ற மூடக்கொள்கையைச் சுட்டெரியுங்கள். பழங்காலப் பெண்களின் சீர்கெட்ட முறையை எடுத்தெறியுங்கள்.



சமூகத்துடன் கூடி வெட்கமெனும் பேயை விரட்டியோட்டுங்கள்...

கிராமத்தில் சேவை செய்வதற்கு 'பாரதி' என்னும் பத்திரிகை வெளிவருவது உங்களுக்கோர் ஊன்றுகோலாகும். இச்சந்தர்ப்பத்தை இழந்து விடாது பிரயோசனப்படுத்திக் கொள்ளுங்கள். வருங்கால உலகு உங்கள் கையில் இருக்கிறது. நீங்கள் எல்லோரும் சேர்ந்து ஒரு சங்கம் நிறுவி அதன் மூலம் கிராமத்தை முன்னேற்றுங்கள். இன்றே நித்திரையை விட்டு விழித்தெழுங்கள்!'

செல்வி நாகேஸ்வரி எழுதிய இரு கட்டுரைகளுள் ஒன்றான 'பெண் பிறவி' தமிழ் இலக்கியங்களில் பெண்கள் இழிவுபடுத்தப்பட்டிருப்பதை விளக்கி விட்டு, பின்வருமாறு முடிவெய்துகின்றது :

'சோதரிகளே, வேண்டாம் பெண் குலத்தின் மானத்தைப் போக்கும் பாக்களும் வேண்டாம். நூல்களும் வேண்டாம். புத்துயிர் தந்த பாரதியாரின் அடிச்சுவட்டைப் பின்பற்றி வாழ்வதே தமக்குத் தகுதி.'

'கூறையும் தாலியும்' என்ற தலைப்பிலே செல்வி நாகேஸ்வரி எழுதிய மற்றொரு கட்டுரை பின்வருமாறு முடிவடைகின்றது : '...இந்தக் கூறை, தாலிக்காக அதிக பணத்தை அள்ளிக் கொட்டி வீணான நஸ்டத்தை உண்டாக்குவதைப் பெரிதும் வெறுக்கிறேன். அந்தச் சேலைக்காக கொடுக்கும் பணத்தைக் கொண்டு நல்லதான பல சேலைகளை வாங்கிக் கொண்டால், வாழ்நாள் முழுவதும் நாமும் பிறரும் உடுக்கக் கூடியதாக முடியுமென்பது எனது கட்சி. தாலி விஷயத்துக்கும் அப்படியேதான்'

ஆக கட்டுரைக ளூடாக, குறிப்பாக, மட்டக்களப்பு பெண்கள் மத்தியிலே சிந்தனா ரீதியான எழுச்சியை ஏற்படுத்திய வர்களென்ற விதத்தில் மேற்குறிப்பிட்ட இருவரும் கவனத்திற்குரியவர்களாகின்றனர். இவர்கள் இருவரும் பற்றிய தகவல்கள் தெரிந்தவர் அறியத்தரின் நன்றியுடையோம்.



# கரைவாகு வடக்கு நகரசபை உருவாக்கமும் சாய்ந்தமருது பிரதேசசபை உருவாக்கமும் கல்முனைத் தமிழர்களுக்கு பெரும் ஆபத்தானவை



கிழக்கு மாகாணத் தமிழர்களைப் பொறுத்தவரை குறிப்பாக அம்பாறை மாவட்ட தமிழர்களைப் பொறுத்தவரை தங்கள் பிரதேசங்களை 'அறுக்கை' செய்வதற்கும் தங்களது சமூக, பொருளாதார, கல்வி, கலை, இலக்கிய, பண்பாட்டு மற்றும் சூழல் பாதுகாப்புக்கான மேம்பாட்டு திட்டங்களை தாங்களே திட்டமிட்டு மேற்கொள்வதற்கும் - பிரதேச மட்டங்களில் அரசாங்கம் அறிமுகம் செய்கின்ற அபிவிருத்தித்திட்டங்கள், வறுமை ஒழிப்பு திட்டங்கள், யுத்தத்தினாலும் இயற்கை அனர்த்தங்களினாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணம் மற்றும் வாழ்வாதாரத் திட்டங்கள், வேலைவாய்ப்புத்திட்டங்கள், சமூக நலத்திட்டங்கள் போன்ற இன்னோரென்ன செயற்பாடுகளின் பலாபலன்களைப் பாராபட்சமின்றிப் பெற்றுக்கொள்வதற்கும் தங்களுக்கென்று தனியான தமிழ்ப்பெரும்பான்மை நிர்வாக அலகுகளும்(பிரதேசசெயலாளர் பிரிவு) அதனை அடிப்படையாக கொண்ட உள்ளூராட்சி அலகுகளும்(பிரதேச சபை), பலநோக்கு கூட்டுறவுச்சங்கங்களும் ஆகிய மூன்று கட்டுமானங்களும் அவசியமானவை.

இந்த மூன்று கட்டுமானங்களையும் ஏனைய சமூகங்களின் அரசியல் தலைமைகள் தங்களது சமூகங்களுக்கு நன்கு திட்டமிட்டு ஏற்படுத்திக் கொடுத்துள்ளன. அதனைக் குறைகூறமுடியாது. அவை அவர்களது தேவை. ஆனால் துரதிஸ்டவசமாக தமிழர்களுடைய அரசியல் தலைமையானது தமிழரசுக்கட்சி காலத்திலிருந்து சமகாலத்தில் தமிழ்தேசியக்கூட்டமைப்புக் காலம் வரை இதில் அறவே அக்கறையற்றே இருந்து வந்துள்ளது.

வெறுமனே சமஸ்டி என்றும் தனிநாடு என்றும் கோசங்களையும் கோரிக்கைகளையும் முன்வைத்து மக்களின் வாக்குகளை தேர்தலுக்காக சேகரித்து கொண்டார்களே தவிர, தமிழ் மக்களின்

**தம்பியப்பா கோபாலகிருஸ்ணன்**

சமூக பொருளாதார அரசியல் இருப்பிற்கான - வலுவுட்டலிற்கான எந்தவிதமான 'களவேலை' களையும் திட்டமிட்டுத் தீர்க்கதரிசனத்துடன் தமிழர்தம் அரசியல் தலைமைகள் மேற்கொள்ளவில்லை. இதன் தாக்கமும் பிரதிபலிப்பும்தான் ஒருபானைச் சோற்றுக்கு ஒருசோறுபதம் என்பது போல கல்முனைப் பிரதேசத் தமிழர்களுக்கு இன்று வந்திருக்கின்ற ஆபத்து.


கல்முனைப் பிரதேசத் தமிழர்களைப் பொறுத்தவரை முன்பிருந்த கல்முனைப் பட்டினசபையை(town council) தரவைப்பிள்ளையார் கோவில் வீதியைப் பிரிக்கும் எல்லையாகக் கொண்டு இரண்டாக பிரித்து, தென்பகுதியை முஸ்லிம் பெரும்பான்மை பட்டினசபையாகவும் வடபகுதியை தமிழ்ப் பெரும்பான்மை பட்டினசபையாகவும் உருவாக்கித்தருமாறு தமிழரசுக்கட்சியை சேர்ந்த அமரர் மு.திருச்செல்வம் அவர்கள் ஸ்தலஸ்தாபன அமைச்சராகப் (உள்ளூராட்சி அமைச்சர்) பதவிவகித்த 1960களிலிருந்தே கோரிக்கை விடுத்து வந்துள்ளனர். ஆனால் இன்றுவரை இக்கோரிக்கை அரசாங்கங்களைப் பொறுத்த வரையிலும் தமிழர்தம் அரசியல் தலைமைகளைப் பொறுத்தவரையிலும் "செவிடன் காதில் ஊதிய சங்கு" ஆகத்தான் இருக்கிறது.

இந்த நியாயமான கோரிக்கையை கிடப்பில் போட்டுவிட்டுத்தான், 1987ஆம் ஆண்டு 15ஆம் இலக்க பிரதேசசபைகள் சட்டத்தின் பிரகாரம் அதற்கு முன் அமுலிலிருந்த பட்டினசபைகளும் கிராமசபைகளும் இல்லாதொழிக்கப்பெற்று பதிலாக பிரதேசசபைகள் அறிமுகம் செய்யப்பெற்றபோது பிரதேசசபைகள் அமுலுக்கு வருமுன்னர் முழுக்கல்முனைத் தேர்தல் தொகுதியிலும் அடங்கியிருந்த கரைவாகு தெற்கு கிராமசபை(சாய்ந்தமருது), கல்முனைப் பட்டினசபை, கரைவாகுவடமேற்கு கிராமசபை(சேனைக்குடியிருப்பு), கரைவாகுவடக்கு கிராமசபை (பெரியநீலாவணை) ஆகிய நான்கு உள்ளூராட்சி அலகுகளும் ஒன்றிணைக்கப்பெற்று முழுக்கல்முனைத் தேர்தல் தொகுதியும் கரைவாகுப்பற்று பிரதேசசபை (கல்முனை) எனும் பெயரில் தனியானதொரு முஸ்லிம் பெரும்பான்மை உள்ளூராட்சி அலகுகாக 1987ல் ஆக்கப்பெற்ற நிகழ்வும் பின்னர் இப்பிரதேசசபை கல்முனைப் தமிழர்களின் எதிர்ப்புக்கு மத்தியில் அமைச்சர் எம்.எச்.எம்.அஸ்ரப் காலத்தில் அலவிமௌலானா அவர்கள் உள்ளூராட்சி மற்றும் மாகாணசபைகள் அமைச்சராக இருந்த போது 1998.12.11 ஆம் திகதியிடப்பெற்ற 1057/16 இலக்கமுடைய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் 11.06.1999 இலிருந்து அமுலுக்குவருமாறு "கல்முனை நகரசபை" எனும் பெயரில் நகரசபை ஆக்கப்பெற்ற நிகழ்வும் - தொடர்ந்து அம்பாறை மாவட்டத்தை சேர்ந்த அதாவுல்லா உள்ளூராட்சி மற்றும் மாகாணசபைகள் அமைச்சராக இருந்த போது 2001.06.11 ஆம் திகதியிடப்பெற்ற 1188/1 இலக்கமுடைய வர்த்தமானி அறிவித்தல்மூலம் 15.04.2002 தொடக்கம் "கல்முனை மாநகரசபை"யாகத் தரமுயர்த்தப்பெற்ற நிகழ்வும் நடந்தேறின.

இத்தகைய எல்லாக்கட்டங்களின் போதும் கல்முனைத் தமிழர்களின் மிக நீண்டநாள் கோரிக்கையான தனியான தமிழ்ப்பெரும்பான்மை உள்ளூராட்சி அலகுக் கோரிக்கை முற்றாக உதாசீனம் செய்யப்பட்டது. தமிழர்தம் அரசியல் தலைமைகள் கண்ணைமூடிக்கொண்டு வாளாவிருந்தன. மட்டுமல்ல, நிர்வாக அலகான கல்முனைப் பிரதேச செயலாளர் பிரிவைத்(முன்பு உதவி அரசாங்க அதிபர் பிரிவு) தரவைப்பிள்ளையார் கோவில் வீதியைப் பிரிக்கும் எல்லையாகக் கொண்டு இரண்டாக பிரித்து தென்பகுதியை 'கரைவாகுதெற்கு'எனும் முஸ்லிம் பெரும்பான்மை நிர்வாக அலகாகவும் வடபகுதியை 'கரைவாகு வடக்கு'எனும் தமிழ்ப் பெரும்பான்மை நிர்வாக அலகாகவும் உருவாக்கித்தருமாறு. கல்முனைத் தமிழர்களின் மிக நீண்டநாள் கோரிக்கையும் புறந்தள்ளப்பட்டது. அதாவது 12.04.1989ல் தனியான உதவி அரசாங்க அதிபர் பிரிவு(உப) அலுவலகமாகத் திறக்கப்பெற்று பின்னர் 28.07.1993 அமைச்சரவை தீர்மானத்தின்படி பிரதேச செயலகமாக தரமுயர்த்தப் பெற்றும்கூட நடைமுறையில் இன்னும்

தொடர்ச்சி... (பக்கம் -15 )

# 'போடியார் மாப்பிள்ளை 'தந்த எஸ்.ஜோன்ராஜனின் மற்றுமொரு படைப்பு -- 'கிராமத்து அத்தியாயம்''




மட்டக்களப்பு பண்பாட்டு கூறுகளில் ஒன்று நெய்தல் நில மக்களின் வாழ்க்கை முறை. அதனை பெரும்பாலும் செ.குணரெத்தினத்தின் படைப்புகளில் எழுவான்கரை மக்களின் வாழ்வியலாக தரிசித்த எமக்கு, புதிதாக வாகரைப்பிரதேச மாங்கேணி மக்களின் வாழ்வியலை, ஒரு புதிய தரிசனத்தை ஒரு கிராமத்து அத்தியாயமாக ஜோன்ராஜன் தர முயன்றுள்ளார்.

கடற்றொழில் கூட்டுத்தாபன அரச உத்தியோகத்தர் அம்மக்களுடன் கடமையாற்றி விட்டு, 2009 க்கு பின்னான ஒரு காலகட்டத்தில் அரசசார்பற்ற நிறுவன ஊழியராக மீண்டும் வேறொரு முகத்துடன் வேலை செய்ய செல்வதாக தொடங்கும் கதை, பழைய ஞாபங்களினூடு பின் நோக்கி நகர்த்தப்பட்டு போருக்கு முந்தைய அக்கால ஆரம்ப கால கிராமத்தின் வாழ்நிலை, வாழ்க்கை முறை, மக்களின் இருப்பு, மெதுமெதுவான குடியேற்றம், வழிபாட்டு முறைகள், ஆதிக்குடிகளின் பண்பாடு, நம்பிக்கைகள் இனக் குழுக்களின் இருப்பு, சங்கமம், காதல் என்று திரைப்படமாய் கண்முன்னே விரியச்செய்யும் படலம் தொடர்கிறது. நாற்பது அத்தியாயத்தில் முப்பத்தெட்டு அத்தியாயம் பின்னோக்கிய உத்தியாகவே கதை நகர்கிறது.

மாங்கேணி கிராமத்தின் ஆரம்ப ஆதிக்குடிகள், தொழிலுக்காய் வருகை தந்த பெரும்பான்மையின மக்கள், நீர் கொழும்பை அடிப்படையாகக் கொண்ட தமிழ் வேர் கொண்ட சிங்கள மக்கள், வர்த்தகத்திற்காய் வருகை தரத் தொடங்கிய முஸ்லிம்கள், தமிழர்கள் என பல சமூக குழுமங்கள் இணைந்த இணக்கங்களும் பிணக்கங்களுமாய் வாழும் சூழல், அவர்களின் நம்பிக்கைகளை அவர்கள் பின்பற்றும் விதம், தோன்றும் காதலும் காமமும் ஆசைகளும் சபலங்களும் என சில்லிடும் நினைவுகள்.

கிழக்கிலங்கையின் முதுசொம் நாட்டுக் கூத்து, தோன்றி செழித்து அவர்களிடையே ஆழமாய் வேரூன்றி வாழும் விதம் மற்றும் தன்னிறைவுப் பொருளாதாரம் எவ்வாறு எம்மை விட்டு தகர்க்கப்படுகிறது, சிறு முதலாளித்துவம், பெரு முதலாளித்துவ முதலைகள் எவ்வாறு எம்மை விழுங்குகின்றன, அது சாதி, சமய, இன முகமூடிகளை அணிந்து கொண்டு வருகின்றது என்பதும் புரிகிறது.

பெருஞ்சமய செல்வாக்கு, அதன் சிந்தனை மாற்றம், சுயத்தை இழந்து அதனை இழிவாக பார்க்கும் தன்மை, இது பல விடயங்களில் தெரிகிறது. சமயம் மட்டுமன்றி இசை, வழிபாட்டு முறை போன்றன காலனிய செல்வாக்கு அழகாக ஆழமாக ஊடுருவிக்கொண்டிருக்கும் தன்மை புரிந்து கொள்ளப்பட வேண்டியதே. வழக்கமான காதலுக்கான வில்லன்களுக்கும் இங்கே குறைவில்லை. மக்களுக்காக செயற்படும் மீன்பிடி நிறுவனத்தின் வேலைப்பளு, தொழிற் தன்மை,மக்கள் அதனைப் பயன்படுத்தும் விதம், மக்களின் மனநிலை, பொது நிறுவனத்தை மக்கள் பயன்படுத்தும் விதம், முதலாளித்துவத்தின் செல்வாக்கு, செயற்பாட்டை பின்னடையச்செய்யும் விதம், கூட்டுறவு

**மணிசேகரம்**

வீணாகப்படும் தன்மை என தொடரும் செயல்கள்.



பிரதேச மொழி பல இடங்களில் சிதறி மின்னுகிறது. பலாத்காரம் என்பதற்கு "சோரா மாரி","பொன்னுக்கு கேட்டல்" என்ற மொழிகளும் "ஆதலையத்தவள்" அனாதை என்பதற்கும் பயன்படும் விதம். எளிமையான மொழிநடையும் பேச்சு வழக்குமாய் கதை நகர்வினும் நாவலுக்கான மொழி நடையை இன்னும் வேண்டி நிற்கிறது.

போடியார் மாப்பிள்ளையில் கன்னன்குடா பேச்சு வழக்கு போல மாங்கேணி

தொடர்ச்சி... (பக்கம் -15 )






# பட்டறிவு

## இழந்த தேசியக்கொடியை தேடிய கதை!



பென்னட் "இலங்கையும் அதன் செயல்திறனும்" (J.W.Bennett - Ceylon And Its Capabilities - An account of its natural resources, indigenous productions and commercial facilities) என்கிற நூல் வெளிவராமல் இருந்திருந்தால் இன்றைய இலங்கையின் தேசியக் கொடியின் கதையே வேறு மாதிரி ஆகியிருக்கும் என்று உறுதியாகக் கூற முடியும்.

1815 கண்டி ஒப்பந்தத்தைத் தொடர்ந்து கண்டி ராஜ்ஜியம் பறிபோனது; அப்படியே ஒட்டுமொத்த இலங்கையும் அந்நியரிடம் பறிபோனது. ஆங்கிலேயர்கள் கண்டியின் கொடியை இறக்கி அதனை கிழக்கிந்திய கம்பனிக்கு ஊடாக இங்கிலாந்துக்கு கொண்டு சென்றுவிட்டனர்.




ஆங்கிலேயர்கள் இலங்கையை ஆண்ட 133 வருடங்களுக்குள் அந்த கொடியை இலங்கை மக்கள் மறந்தே போயினர். கண்டியில் ஆங்கிலேயர் தமது யூனியன் ஜேக் கொடியை ஏற்று முன்னர் அங்கிருந்து இறக்கியதாக கூறப்படும் கொடி எது என்பது பற்றி பலரும் அறிந்திருக்கவில்லை. இந்த நேரத்தில்தான் பென்னட் எழுதிய நூலொன்றின் இந்தக் கொடி பற்றிய விபரங்களை அறிந்துகொண்டார். இலங்கையின் தேசிய வீரர்களில் ஒருவராக போற்றப்படும் ஈ.டபிள்யு.பெரேரா. லண்டனில் கற்றுக்கொண்டிருந்தபோது ஆங்கிலேயர்கள் பறித்துச் சென்ற இலங்கையின் கொடி எப்படி இருக்கும் என்பதை தீவிரமாக அறிந்துகொள்ள விழைந்தார். இந்தத் தேடல் இலங்கையின் கொடிகள் அனைத்தைப் பற்றியுமான ஒரு ஆய்வு நூலைத் தொகுத்துப் பதிப்பிடும் அளவுக்கு கொண்டு சென்றது.

அன்றைய தொல்பொருள் ஆணையாளராக இருந்த ஈ.சி.பெல் என்பவரின் வழிகாட்டலின்படி கண்டி மன்னனின் இறுதிக்கொடியைத் தேடி இங்கிலாந்து புறப்பட்டார். 1815 காலப்பகுதியில் இலங்கையிலிருந்து ஆங்கிலேய ஆட்சியாளர்களால் கடத்திச்செல்லப்பட்ட மதிப்புமிக்க பல்வேறு பொருட்கள் உள்ள இடங்களில் அக்கொடியை தேடியலைந்தார். இந்த முயற்சிக்கு ஆரம்பத்திலிருந்து அதிக அக்கறை செலுத்தி பெருமளவு செலவை ஏற்றுக்கொண்டவர் லேக்ஹவுஸ் நிறுவனத்தின் ஸ்தாபகரும் பிரபல செல்வந்தருமான டீ.ஆர். விஜயவர்தன. இவர் இன்றைய பிரதமர் ரணிலின் தாய்வழிப் பாட்டனார். ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் மாமனார். ஈ.டபிள்யு பெரேராவும், டீ.ஆர்.விஜயவர்தன இருவரும் லண்டனில் 1908 அளவில் ஒன்றாக கற்றுக்கொண்டிருந்தவர்கள்.

பென்னட்டின் நூலில் 12.10.1815 அன்று லண்டனிலுள்ள whitehall chapel இல் பாதுகாப்பாக சேகரித்துவைப்பதற்காக அனுப்பப்பட்டதாக ஒரு குறிப்பு உள்ளது. இந்த நூல் வெளிவந்த ஆண்டு 1843. இன்றும் கண்டி ராஜ்ஜியத்தில் இருந்து கடத்திக்கொண்டுசெல்லப்பட்ட அரசனின் சின்னங்கள் வைக்கப்பட்டிருக்கிற வைட்ஹோலில் இந்த சின்னங்கள் 1803இல் கொண்டு வரப்பட்டதென்கிற குறிப்புகளுடன் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

வைட்ஹோல் என்பது ஐரோப்பாவிலேயே மிகப்பெரும் அரண்மனையாக ஒரு காலத்தில் இருந்தது. 1500 க்கும் மேற்பட்ட




அறைகளைக் கொண்டது அது. இன்றும் அதை மக்கள் போய் பார்வையிட்டு வருகிறார்கள். பழங்காலத்தைப் பிரதிபலிக்கும் நூதனசாலையாக இயங்கிவருகிறது. அங்கு தான் இன்றும் இலங்கையில் இருந்து கடத்திக் கொண்டு செல்லப்பட்ட முக்கிய அரச காலத்து பொருட்களின் ஒரு தொகுதி Great Hall என்கிற பகுதியில் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கிறது.

ஈ.டபிள்யு.பெரேரா தனது தேடல்களைத் தொகுத்து 1916இல் "sinhalese Banner and Standards" எனும் நூலை வெளியிட்டார். அந்த நூலில் இப்படி குறிப்பிடுகிறார்.

"பெனட் எனும் ஆங்கில ஆய்வாளரின் ஆலோசனைப்படி அந்தக் கொடியைத் தேடிக்கொண்டு United service museum சென்று தேடியதில் ஒருபலனும் கிடைக்கவில்லை. பல இடங்களில் தேடிக் கொண்டு சென்ற போது லண்டனிலுள்ள செல்சீ அரச வைத்தியசாலை (Royal Hospital Chelsea) சேமிப்பகத்தில் தற்செயலாக கிடைத்தது நமது சிங்கக் கொடி." என்கிறார்.

அங்கு நெப்போலியனின் கழுகு இலச்சினையும் இருந்ததாக பெரேரா தெரிவித்திருந்தார். அவருக்கு கிடைத்த மூன்று கொடிகளில் இரண்டு வர்ணம் மங்கிப்போன நிலையில் கிட்டியது. ஒன்று மாத்திரம் கவனமாக துப்பரவு செய்து எடுத்தபோது சற்று உருக்குலைந்த நிலையில் ஒரு கொடியைக் கண்டெடுத்தார். அதுவே இலங்கை இறுதியாக ஆண்ட கண்டி அரசனின் கொடி என்று அவர் நம்பினார். அதன் வடிவத்தை பெற்றுக்கொள்ளும் முயற்சியில் டீ.ஆர்.விஜயவர்தன, எப்.ஆர்.சேனநாயக, டீ.பீ.ஜயதிலக்க போன்ற தலைவர்களுடன் கலந்துரையாடி அந்த கொடி சவுத்வூட் அண்ட் கொம்பனி என்கிற நிறுவனத்தின் உதவியுடன் பிரதிசெய்து நிறமூட்டி இலங்கைக்கு கொண்டுவரப்பட்டது. இந்த மகிழ்ச்சியை நாட்டு மக்களுக்கு செய்தியாக தெரிவிக்க லேக்ஹவுஸ் உரிமையாளர் டீ.ஆர். விஜயவர்தன தினமின பத்திரிகைக்கு ஊடாக அதனை வெளியிட்டார். சரியாக கண்டி அரசனின் கொடி இறக்கப்பட்ட 100வது ஆண்டில் அதே 02,03.1915 அன்று அந்த அறிவிப்பு வர்ண நிறத்தில் பிரேத்தியேகமாக வெளியிடப்பட்டது. இலங்கை அந்நியரிடம் பறிபோன காலத்தில் கடைசி அரசின் கொடி எப்படி இருந்தது என்பது பற்றி அப்போது தான் இலங்கை மக்கள் அறிந்துகொண்டனர்..

பிற்காலத்தில் கொழும்பு நூதனசாலையின் இயக்குநராக இருந்த P.H.D.H. டீ சில்வா வெளிநாடுகளில் உள்ள இலங்கையின் தொல்பொருள் மற்றும் இதர கலாசார பொருள்களின் பட்டியல்" (A Catalogue of Antiquities And Other Cultural Objects From Sri Lanka (Ceylon) Abroad - 1975) என்கிற தலைப்பில் ஒரு நூலைத் தொகுத்தார். அதில் செல்சீ அரச வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்த இலங்கையின் கடைசி அரசனின் கொடிகள் பற்றி சிலவற்றைக் குறிப்பிடுகிறார். அதன்படி

1803 ஆம் ஆண்டு கண்டியில் இருந்து கைப்பற்றப்பட்ட மூன்றுவிதமான கொடிகளை கிழக்கிந்திய கம்பனிக்கு ஊடாக 4ஆம் வில்லியம் மன்னரின் அனுமதியுடன் பாதுகாப்பாக வைப்பதற்காக இந்த வைத்தியசாலைக்கு அனுப்பட்டது. பல வருடங்களாக அந்த வைத்தியசாலையில்

**என்.சரவணன்**

தொங்கவிடப்பட்டிருந்த அந்த கொடிகள் அப்படியே உருக்குலைந்து போனதில் "அரசரின் போர்க்கொடி" ("The King's war standard") என்று அறியப்பட்ட ஒரு கொடி 1934ஆம் ஆண்டு அழித்துவிட்டார்கள். அந்தக் கொடி பிரிட்டிஷ் படையின் 51வது படைப்பிரிவின் கப்டனாக இருந்த வில்லியன் பொல்லக் (Capt. William Pollock) 1803 செப்டம்பர் 13 அன்று கைப்பற்றியதாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்தக் கொடியில் சிங்கம் எதுவும் இருக்கவில்லை மாறாக பல்வேறு ஆயுதங்கள் குறியீடுகளாக காணப்பட்டிருக்கின்னது. எஞ்சியிருந்த ஏனைய இரு கொடிகளும் பழுதடைந்திருந்த நிலையில் ஒட்டுவைத்து தைக்கப்பட்டிருந்திருக்கிறது. 1870 ஆம் ஆண்டு இந்த மூன்று கொடிகளுடன் வேறு கொடிகளும் சுவரில் தொங்கவிடப்பட்டிருந்ததை படமாக எடுத்து அதுபற்றிய குறிப்பு வைக்கப்பட்டிருந்தது.

P.H.D.H. டீ சில்வா தனது நூலில் இது பற்றிய மேலதிக விபரங்களுக்கு கப்டன் போர்ட் (J. Ford) 1841 எழுதிய "செல்சீ வைத்தியசாலையில் உள்ள போர்க்கொடிகள்" (The War Flags at the Chelsea Hospital) என்கிற நூலை ஆதாரம் காட்டுகிறார்.

இவற்றில் ஒரு கொடி சிகப்பு நிற பின்னணயில் வாள் ஒன்றை ஏந்தியபடி மங்கிய நீல நிறத்தில் சிங்கத்தின் உருவத்துடன் The Secretary At - Hand Flag என்றும் The King's Civil Standard (அரசரின் குடியியல் கொடி) என்கிற குறிப்புகளுடன் கொடிகள் கண்டுபிடிக்கப்பட்டன.

இந்தக் கொடியைத் தான் 1945 செப்டம்பர் மாதம் தேசியக்கொடியாக ஆக்க வேண்டும் என்கிற யோசனையை ஜே.ஆர் அரசாங்க சபையில் முன்மொழிந்தார். இலங்கை சுதந்திரமடைவதற்கு இரு வாரங்களுக்கு முன்னர் 16.01.1948 அன்று அரசாங்க சபையில் டீ.எஸ்.சேனநாயக்க உரையாற்றும் போது,

"இது கண்டி அரசனின் கொடி என்பதை நாமெல்லோரும் அறிவோம். அதுபோல கண்டி அரசன் தமிழ் அரசன் என்பதையும் நாம் அறிவோம். இப்போது இங்கிலாந்து இறைமையை இந்தத் தீவின் மக்களுக்கே கைமாற்றுகிறது. நாங்கள் இழந்த இறைமையை திருப்பித் தரும்போது எமது கொடியையும் பதிலீடு செய்ய வேண்டும்...."

இப்படித் தான் "கண்டியக் கொடி" இலங்கையின் தேசியக் கொடியானது. பல்வேறு சர்ச்சைகளுடன் அது மாற்றங்களுக்கு உள்ளானபோதும். இன்றும் இந்தச் சிங்கக் கொடியைத்தான் சிங்களத்தின் கொடியாக நம்பிக்கொண்டிருக்கிறார்கள் சிங்களவர்கள். இது உண்மையிலேயே கண்டியரசின் இறுதி கொடிதானா? சிங்கள பௌத்த பேரினவாதத்தின் சிங்கம் பற்றிய புனைவுகளின் நீட்சி சிங்கக் கொடி தமது கொடி என்று நம்புமளவுக்கு கொண்டுவந்து விட்டதன் பின்புலம் தான் என்ன என்பதை பற்றி அடுத்த இதழில் காண்போம்.

# மட்டு மாநகரசபை

## சபை உறுப்பினர்களும் பிரேரணைகளும்

அன்பழகன் குரூஸ் (JP) M.A, P.G.Dip in Edu, Dip in LG.
சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்

உள்ளூராட்சி பற்றிய கட்டுரைகளில் இதுவரை நாம் பொதுமக்கள் அறிந்துகொள்ள வேண்டிய விடயங்களை வெளிப்படுத்தினோம். இந்தக்கட்டுரை முழுக்க முழுக்க உள்ளூராட்சி மன்றச் சபை உறுப்பினர்களை இலக்காகக் கொண்டு வரையப்படுகிறது.

ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றத்தினதும் தற்போதைய சபையின் பதவிக்காலம் இன்றளவில் சுமார் ஒரு ஆண்டைத் தொட்டிருக்கின்றது. இந்த ஓராண்டில் ஒவ்வொரு மக்கள் பிரதிநிதிகளும் மக்களுக்காக எதைப் பெற்றுக்கொடுத்தார்கள் என்று சிந்திக்க வேண்டிய தருணமிது. ஏனெனில் இன்னும் மிச்சம் இருப்பது மூன்று ஆண்டுகள் மட்டுமே.

ஓர் உள்ளூராட்சி மன்றம் என்பது பிரதேச அளவில் மக்கள் தமது பிரதிநிதிகளை தாங்களே தெரிவுசெய்து, அவர்களிடத்தில் சட்டரீதியான அதிகாரங்களை வழங்கி, அந்த அதிகாரங்களின் மூலம் வருமானங்களையீட்டி, குறித்த அந்தப் பிரதேசத்தை அபிவிருத்திப் பாதையில் இட்டுச் செல்லும் ஒரு சிறிய ஆட்சி முறை என வரைவிலக்கணப்படுத்தலாம். இதற்கமைவாக ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றத்தினதும் மக்கள் பிரதிநிதிகள் பிரதேச அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு, எல்லோரும் ஏற்கத்தக்க பிரேரணைகளைக் கொண்டுவந்து, அந்த பிரேரணைகளை சபையோரால் ஏற்கச்செய்து, அந்தப் பிரேரணை மூலம் தமது பிரதேசத்தை அபிவிருத்தி செய்திருக்க வேண்டுமென்பது உள்ளூராட்சியின் பிரதான கோட்பாடாகும்.

ஒவ்வொரு சபை அமர்விலும் மக்கள் பிரதிநிதிகள் உள்ளூராட்சி விடயப்பரப்புக் குட்பட்டதாகப் பிரேரணைகளைச் சமர்ப்பிக்கலாம். பிரேரணையானது பிரதேச அபிவிருத்தியை நோக்காகக்கொண்டு அமையும். இதனை எழுத்துமூலம் தமது கையொப்பத்துடன் கூட்டம் நடைபெறுவதற்கு ஏழு வேலை நாட்களுக்கு முன்பதாக சமர்ப்பிக்க வேண்டும். முறையாகச் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணைகள் திகதியிடப்பட்டு, வரிசைக்கிரமமாக இலக்கமிடப்பட்டு, அந்த ஒழுங்கில் அடுத்து கூட்ட நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்படவேண்டும். அவை கூட்டம் நடைபெறுகையில் முன்மொழியப்பட்டு, வழிமொழியப்பட்டு, விவாதிக்கப்பட்டு சபையின் பெரும்பான்மை உறுப்பினர்களின் ஒப்புதலுடன் தீர்மானமாக மாறும். இந்தத் தீர்மானமே பிரதேச அபிவிருத்திக்கான ஒரு திட்ட முன்மொழிவாக அமையும்.

பிரேரணை ஒன்று நிராகரிக்கப்டுமாயின் முதல்வரால் அல்லது தவிசாளரால் அதற்கான காரணம் தெளிவாகக் கூறப்பட்டு எழுத்துமூலம் சமர்ப்பித்தவருக்குத் தெரியப்படுத்த வேண்டும்.

நீங்கள் ஏற்கனவே சமர்ப்பித்த பிரேரணையொன்றை திருத்தியமைக்க வேண்டுமாயின் ஆறு மாதங்களுக்குப் பின் அந்தப் பிரேரணையில் திருத்தம் கொண்டுவரலாம். ஒரு பிரேரணையை நிராகரிக்கப்படுமாயின் மீண்டும் அதனை ஆறு மாதங்களின்பின் கொண்டுவரலாம்.

ஒவ்வொரு உள்ளூராட்சி மன்ற உறுப்பினரும் இதுவரை தாங்கள் எத்தனை பிரேரணைகளைச் சமர்ப்பித்தார்கள் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். மக்களுக்கு தேவையானதும், பிரதேசத்தை அபிவிருத்தி செய்யக்கூடியதுமான முன்மொழிவுகளை சமர்ப்பித்து, அதனை நிறைவேற்றியவர்களுக்குப் பாராட்டுக்கள்.

சபை உறுப்பினர்கள் தமக்குள் காணப்படும் வேறுபாடுகளை மறந்து, உங்களுடைய பிரதேச அபிவிருத்தியைக் கருத்திற்கொண்டு, மக்களது தேவைகளை நிறைவேற்றும் வகையில், புத்தாக்க சிந்தனையோடு வருமானங்களை ஈட்டத்தக்கவகையில் பிரேரணைகளை எழுதிச் சமர்ப்பியுங்கள். அவ்வாறு நீங்கள் சமர்ப்பித்த ஒவ்வொரு பிரேரணையும் மக்களுடைய தேவைகளை நிறைவேற்றுவதுடன், பிரதேச அபிவிருத்தி என்ற சிந்தனைக்கு அடித்தளமிடும்.

எனவே உங்களுடைய வட்டாரங்களில் அல்லது உங்களுடைய உள்ளூராட்சி மன்றப் பிரதேசங்களில் புதிதாக நிர்மாணிக்கக்கூடிய, மக்களுக்குத் தேவையான விடயங்களை அடையாளங்கண்டு எழுத்துமூலமான பிரேரணையாகச் சமர்ப்பியுங்கள். இது உங்களுடைய தார்மீகக் கடமையாவதுடன், எதிர்காலத்தில் உங்களுடைய பொதுநல வாழ்க்கையை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல உதவுவதாகவும் அமையும்.

ஏசியா பவுண்டேசன் நிறுவனத்தின் உபதேசிய ஆளுகை திட்டத்தின் நன்கொடையின் ஊடாக இந்தப் பக்கத்துக்கான அனுசரணை வழங்கப்படுகின்றது

தொடர்ச்சி...

## ‘அப்பா எப்பம்மா வருவார்‘ --- ‘எனது கணவர் எங்கே?

‘இலங்கை அரசாங்கம் எங்களையும் ஏமாற்றி எங்கள் பிள்ளைகளையும் ஏமாற்றி சர்வதேசத்தையும் ஏமாற்றிவருகிறது நாங்கள் இலங்கை அரசாங்கம் நீதியை பெற்றுத்தரும் என்ற நம்பிக்கையை இழந்துவிட்டோம், நாங்கள் தற்போது நம்பியிருப்பது சர்வதேசத்தையே’ என்றும் அவர் கவலை வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்

‘சர்வதேச நாடுகளுக்கு நல்லிணக்க செயற்பாடுகளில் ஈடுபடுவதாக காட்டிக்கொண்டு இலங்கை அரசாங்கம் கடத்தல்களில் ஈடுபடுபவர்களை பாதுகாக்கும் செயற்பாடுகளில் ஈடுபடுவதுடன் இனவழிப்பு செய்தவர்களை காப்பாற்றவே முனைகிறது.

இலங்கை அரசாங்கத்தின் இந்த செயற்பாடுகளை சர்வதேசத்திற்கு எடுத்துச்செல்லும் வகையில் எதிர்வரும் 19ஆம் திகதி வடகிழக்கில் கதவடைப் போராட்டத்தினையும் கவன ஈர்ப்பு பேரணியையும் நடாத்த தீர்மானித்துள்ளோம்.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் சபையின் கூட்டத்தொடர் நடைபெற்றுவரும் இக்காலப்பகுதியில் இலங்கை விடயம் தொடர்பில் எதிர்வரும் 20ஆம் திகதி ஆராயப்படவுள்ளது.

இந்த நிலையில் இலங்கைக்கு மேலும் கால அவகாசம் வழங்கக்கூடாது எனக்கோரியும் சர்வதேசத்தின் நேரடி தலையீட்டைக் கோரியும் இந்த போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது’ எனவும் அவர் தெரிவித்தார்.

‘08 ம் திகதி சர்வதேச மகளிர் தினம் கொண்டாடப்படும் நிலையில் இலங்கையில் நடைபெற்ற யுத்தம் அதிகளவான பெண்களின் வாழ்க்கையில் மீழமுடியாத துன்பத்தையே தந்து, சென்றுள்ளது.

அதிலும் குறிப்பாக பெண்கள் தலைமைதாங்கும் குடும்பங்களின் வாழ்வாதாரப் போராட்டம் தொடர்ந்துகொண்டே உள்ளது.

பொருளாதார ரீதியாகவும் சமூகரீதியாகவும் கலாசார ரீதியான மதச்சடங்குகளின் மூடநம்பிக்கைகளுக்குள்ளும் முட்டி மோதிக்கொண்டிருக்கின்றனர். அதில் இருந்து வெளியில் வரமுடியாதவர்களாக மிகுந்த மன அழுத்தத்தின் மத்தியில் தங்களுக்காக தாங்களே போராடிக்கொண்டிருக்கும் இந்தப் பெண்களை விட்டுவிட்டு இந்த சர்வதேச மகளிர் தினத்தை எம்மால் கடந்துசெல்ல முடியாது.

அவர்களுக்கான நீதி கிடைக்கிறதோ இல்லையோ அவர்களின் நிம்மதியான வழ்க்கைக்கு, அவர்களது தேடல்களுக்கு விடைகாண உதவுவதற்கு மனிதாபிமானம் உள்ள அனைவரும் ஒன்று சேர்ந்து செயற்படுவது காலத்தின் கட்டாயமாக உள்ளது’ என்றும் அவர் குறிப்பிட்டார்.

உலகளாவிய ரீதியில் அதிகளவு காணாமல் ஆக்கப்பட்டோர் நாடுகளின் வரிசையில் இலங்கை முதலிடத்தில் உள்ளதாக காணாமல்போனோர் அலுவலகத்தின் தலைவர் சாலிய பீரிஸ் கடந்தவருடம் தெரிவித்திருந்தர்.

முன்னைய ஆணைக்குழுவின் மூலம் பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில் 20 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் காணாமல் போயுள்ளமை கண்டறியப்பட்டுள்ளதாகவும் அந்தவகையில் ஆசியாவில் மாத்திரமின்றி உலகளாவிய ரீதியிலான காணாமல் ஆக்கப்பட்டோர் பட்டியலை நோக்கும்போது இலங்கை முதலிடத்தில் உள்ளதாகவும் அவர் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் ஜெனீவாவில் இடம்பெற்று வரும் ஐ.நா. மனித உரிமை ஆணையத்தின் கூட்டத்தொடரில் தனக்கு பதிலாக மூவரை அனுப்பிவைக்க உள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கும் ஊடக நிறுவனங்களின் பிரதானிகளுக்கும் இடையில் கடந்த புதனன்று (06) காலை இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அதனடிப்படையில் பாராளுமன்ற உறுப்பினர் சரத் அமுனுகம, மகிந்த சமரசிங்க மற்றும் வடமாகாண ஆளுநர் சுரேன் ராகவன் ஆகியோர் இந்த கூட்டத் தொடரில் கலந்து கொள்ளவுள்ளனர்.
இதன்போது பிரச்சினைகளை தீர்த்துக்கொள்வதற்கு இலங்கைக்கு வாய்ப்பளிக்குமாறு ஐ.நா. மனித உரிமை ஆணையத்திடம் இவர்கள் கோரிக்கை விடுக்க எதிர்ப்பார்த்துள்ளதாகவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி...

## ஈழ நாட்டியம் வேர்களிலிருந்து விரியும் நம் கலை அடையாளம்

வித்தியானந்தன், சண்முகதாஸ் ஆகியோரிடம் அறிவார்ந்த அறிதலும் பேராசிரியர் மௌனகுருவிடம் ஆற்றுகையும் அறிவும் இணைந்த அறிதல் என்னை நெறிப்படுத்தி செம்மையிட்டது. இந்தியாவின் தலை சிறந்த அரங்கவியலாளர்களிடம் அரங்கக் கலையை கற்றுக் கொண்டதும் புரசை கண்ணப்பத் தம்பிரானிடமும் பேராசிரியர் ஆறுமுகத்திடமும் தெருக்கூத்து பயின்றதும் அனுபவ வழிப் பட்ட பயணம். ஈழ நாட்டியம் அதை முன் மொழிவதற்கான தகுதியை இவர்களிடமிருந்து மட்டுமல்ல என் முப்பாட்டன் வழி வந்த பரம்பரை புலவர் கலை மரபும் துணைவர ஈழ நாட்டியமாய் எங்கள் அடையாளமாய் உங்களோடு நான்.

ஈழ நாட்டிய அரங்காற்றுகையில் கலந்து கொண்ட அனைவருமே பிரான்சில் பிறந்து வளர்ந்தவர்கள். தாம் வாழும் சூழலில் நடைமுறைக் கேள்வியாய் மற்ற சமூகத்தினர் உங்கள் பாரம்பரிய நடனம் எது என்ற கேள்விக்கு கருத்தியல் தளத்திலும் ஆற்றுகை தளத்திலும் பதில் சொல்லும் திறன் படைத்தவர்களாய் அவர்கள் இன்று மாறியுள்ளனர்.



*(போக்குவரத்து சாதனங்களுக்கு உலக மட்டத்தில் ஒரு வரலாறு இருக்கின்றது. எங்கள் மட்டக்களப்பு மண்ணில் எங்கள் போக்குவரத்துச் சாதனங்களுக்கும் ஒரு குட்டி வரலாறு இருக்கிறது. முழுமையாக இல்லாவிட்டாலும், சுவாரசியத்துக்காகவாவது அவற்றில் சிலவற்றை இங்கு பதிகிறார் எழுத்தாளர் இரா.தவராஜா. அவரது திரையரங்குகளின் வரலாறு போல இதுவும் வாசகர்களைக் கவரும் என்று எதிர்பார்க்கிறோம். -- ஆசிரியர்)*

## மட்டக்களப்பு: வக்கிக் கரத்தை முதல் ஓட்டோ ரிக்ஷா வரை!



### வைக்கிக்கரத்தை

07.05.2000ல் வீரகேசரி வாரவெளியீட்டில் 25ம் பக்கம் ‘இலங்கையருடன் கலந்துவிட்ட போர்த்துக்கீச கலாசாரம்!' என்கின்ற நீண்டதொரு கட்டுரையொன்றை எழுதியிருந்தேன். அக்கட்டுரையில் 5ம் பந்தியில் வரலாற்றுச் செய்தியாக கீழ் வரும் பந்தியை பதிவு செய்திருந்தேன். அப்பந்தியில் வரும் சிறு பகுதியிது.

.....பறங்கியர் தச்சு வேலையிலும் திறமை பெற்றிருந்த காரணத்தினாலும் வண்டிகள் அமைக்கும் தொழில் நுட்பங்களை அறிந்து இருந்ததினாலும் எருதுகளைப் பூட்டி இழுத்துச் செல்லும் வண்டிகளைச் செய்து, பொதி சுமப்பவர்களுக்கு கொடுத்தார்கள். அவை பயணிகள் மட்டும் பயணம் செய்யும் "வைக்கிவண்டி" பொதி ஏற்றும்

''ஒற்றைமாட்டுவண்டி'', "இரட்டைமாட்டுவண்டி" "தள்ளுவண்டி" சோடாவண்டி, என பயன்படுதன்மையிலும் வடிவ அமைப்பிலும் வேறுபட்டவைகளாக காணப்பட்டன!......

அக்காலத்தில் பறங்கியின மக்களால் சகமக்களுக்கு தயாரிக்கப்பட்டு தரப்பட்ட பல பேருபகாரங்களில் ஒன்று இந்த பலவகை வண்டிகள். அதில் "வைக்கி வண்டியை" போர்த்துக்கேயருக்குரிய பாசையில் "படிக்கி" என்றே அவர்கள் அழைத்தனர். இதை நம்மவர்கள். "வைக்கிக்கரத்தை"என்றும் "சவாரி வண்டி" என்றும் ''பயணிகள் வண்டி'' என்றும் அழைத்தனர்.

இவ்வண்டியை இழுத்துச் செல்ல எருதுகளே பயன்படும்படி இவ்வண்டிகள் அமைக்கப்பட்டன. முன்பு பிரயாணிகளை இடத்துக்கு இடம் கொண்டு செல்லும் முக்கிய பணியை இந்த வைக்கிவண்டிகளே ஆற்றின. அன்று இதுவே பிரபல்யமாகவும் நாகரிகமாகவும் இருந்தது. இவ்வண்டியில் நான்கு பிரயாணிகள் அமர்ந்திருக்க வண்டியின் ஓட்டுநர் பயணிகள்கூறும் இடத்துக்கு கொண்டு சென்று விடுவார். இதனால் இடத்துக்கு இடம் கால் நடையாக பயணம் செய்வதில் முன்னர் இருந்த சிரமம் குறையலாயிற்று. பாடசாலை ஆசிரியர்கள் மாணவர்கள் எனப்பலர் வாடிக்கையாளர்களாக இதையமர்த்தி பயன்படுத்தி வந்தனர். அதுவே அந்நாட்களில் சினிமாத் திரை அரங்குகளின் விளம்பர வண்டியாகவும் பயன்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இவ் வைக்கிக் கரத்தைகள் மிக அழகாகவும் நேர்த்தியாகவும் பிரயாணிகள் சௌகரியமாக பயணம் செய்யக்கூடியதாக

வடிவமைக்கப்பட்டதோடு, குட்டித்தேர்கள் போல் அலங்கார வேலைகளோடு காட்சியளித்தன. வைக்கிக்கரத்தையினுள்

ஏறுவதற்கு இரும்பினால் உறுதியானதும் வேலைப்பாடுடன் கூடிய படிகளும் இருப்பதற்கென பஞ்சு அடைக்கப்பட்ட இருக்கைகளும் பொருத்தப்பட்டிருந்தன. அத்தோடு பயணிகள் பிரயாணம் பண்ணும் போது உள்ளிருந்தபடி பிடித்துக்

கொள்ள கைப்பிடிகளும் இருந்தன. எருதின் ஏரிக்கருகில் இருக்கும் பிடரியில் "நுகத்தடி"யை வைத்து அந்நுகத்தடியோடு பின் இருக்கும் வண்டியை இணைக்க இரு நீண்டதடிகளை பயன்படுத்தியிருந்தனர். அவைகளை''போங்கம்பு' என்று அழைத்தார்கள். அதேவேளை எருதுகளின் கொம்புகளைச் சீவி அக் கொம்புகளில் வெங்கலத்தால் / பித்தளையால் செய்யப்பட்ட வேலைப்பாடுடன் கூடிய பூண்களை சூட்டியிருந்தார்கள். எருதுகளின் கழுத்தில் வெண்கல மணிகளைக் கட்டியிருந்தார்கள். இவ்வாறு கட்டப்பட்டமணிகள் எழுப்பும் ஓசையிலிருந்து வருகின்றவண்டி யாருடையது என பிறர் அறியக்கூடியதாக இருந்தது. வண்டிச் சில்லுகளுக்கு பல வர்ணங்களைப் பூசி மேலும் மெருகூட்டி தங்கள் வண்டிகளை அடையாளப் படுத்தியிருந்தார்கள்.



அக்காலத்தில் இவ் வைக்கிக் கரத்தைகள் பல ஒன்று சேர்ந்து கதிர்காமம், கொக்கட்டிச்சோலையெனபக்தி யாத்திரைகளையும் மேற்கொண்டிருந்தன.

இவ் வைக்கிக் கரத்தைகளை அக்காலத்தில் கோட்டைமுனையைச் சேர்ந்தவர்களே அதிகமாக வைத்திருந்தனர்.

கோட்டைமுனையைச் சேர்ந்தவர்கள் வைக்கிக்கரத்தை, ஒற்றைமாட்டுவண்டி, இரட்டைமாட்டுவண்டி எனவைத்திருந்து, தொழில் செய்தமைக்கு காரணம் என்ன? என்பதை எதிர்வரும் அரங்க இதழ்களில் வாசகர்களுக்கு அறியத் தருவேன்.

அன்று வைக்கிக்கரத்தை வைத்திருந்தவர்களில் சிலரை இப்போது பார்க்கலாம். கறுவல்த்தம்பி, சின்னத்துர் சிதம்பரப்பிள்ளை, இராசேந்திரம், செல்வராசர் துரைராசர், அருனாச்சலம், நடராசர் நேசதுரை, தங்கத்துரை சுப்பிரமணியம் எனப் பெயர்ப் பட்டியல் நீண்டு கொண்டே போகும். சீலாமுனையில் பொன்னையா என்பவரும் வைக்கிக்கரத்தை வைத்திருந்தார். கொலற் லேனில் வசித்த நல்லதம்பி என்பவர் எருதுக்குப் பதிலாக குதிரையைப்பூட்டி ஓடியதினால்

அவர் 'குதிரைவைக்கி நல்லதம்பி' எனப் பெயர் பெற்றார். இவரிடம் இரண்டு குதிரைகள் இருந்ததென அறியக் கூடியதாக இருந்தது.

அக்காலத்தில் மிக வறுமையான வர்களுக்கும் முதியோர்களுக்கும் கச்சேரியில் மாதமொன்றுக்கு ஐம்பது சதம் தர்மக் கொடையாகக் கொடுக்கப்பட்டது. அதைப் பெற்றுக் கொள்ள அவ்வூதியம் பெறும் வயோதிபர்கள் நான்குபேர் சேர்ந்து வைக்கிக்கரத்தையை வாடகைக்கு அமர்த்தி கச்சேரி சென்று கோட்டைமுனைக்கு திரும்பவும் வர கூலியாகக் கொடுக்கப்பட்டது இருபதுசதம். இதை தலா ஒருவருக்கு ஐந்து சதவீதம் சேர்த்து வைக்கிக்கரத்தைக்கு கொடுத்து வந்தார்கள்.

### வாடகைக் கார்கள்

விஞ்ஞான வளர்ச்சியால் மோட்டார் வாகனங்கள் பாவனைக்கு வந்ததும் வைக்கியின் மௌசு குறைய சகலரும் காரில் பிரயாணம் பண்ணத் தொடங்கினார்கள். இந்த மோட்டார் கார்களையும் வாடகை வண்டியாக பலர் செலுத்தத் தொடங்கினர். அவர்களில் யோகர், மைலர், கார்கார மணியம், என்பவர்கள் ஆரம்ப கார்காரர்களாக இருந்திருக்கிறார்கள். இவர்களில் கார்கார மணியத்தின் கார் சாரதிகளை பழக்கம் காராகப் பயன்பட்டமை குறிப்பிடத்தக்கது. அக்காரின் இலக்கம் c.y.6000.

அக்காலத்தில் கோட்டைமுனையைச் சேர்ந்தவர்களில் பான்சாலை வீதி சிவராசா, அரசரெத்தினம், மோர்சாப்பிட்டி

செல்லத்தம்பி, குணம், வீரகேசரி மணியம், தர்மரெத்தினம், பிறேமன், சோனகர் தெருவில் நாகூறுமீரிசா, நேசதுரை, (இவ ரின் காரும் சாரதிகளைப் பழக்கும்காராக பயன்பட்டது). அதன் இலக்கம் e.y. 666, தங்கத்துரை, சோமசுந்தரம், தவராஜா

கலாபூசணம் அரங்கம்
இரா.தவராஜா

ரெட்ணராஜா. மேலும் கொலற்லேனில் செல்வராசா, கிதுறுமுகைதீன், அத்துறுமான், நூறுதீன், மம்மக்காசிம் இவரின் காரும் சாரதிகளை பழக்கும் காராகப் பயன்பட்டது. அதன் இலக்கம் c.e.5876 மேலும் முதலியார்வீதி தங்கராசர் ஊறணி சிவராசர், ஆரையம்பதி தவராசர், கிரான்குள காசுபதி, வெயிலிவீதி நவரெத்தினம், ஆமன் கோணர் வீதியைச் சேர்ந்த சுருட்டுச்சாவல் போடியார், அவரின் மகன்மார் பாறுக், மஹுறுப், திசவீரசிங்க சதுக்கத்தைச் சேர்ந்த மாஸ்டர் உலக

சேகரம் தவராசா, மாமாங்கம் சிதம்பரப்பிள்ளை, கல்லடி உப்போடையைச் சேர்ந்த ஜெமினி தங்கராஜர் இவரின் தம்பி கிருபா, கணபதிப்பிள்ளை, கருவப்பன்கேணி தேவசகாயம், நடராசா, கூளாவடியைச் சேர்ந்த தம்பிப்பிள்ளை, இராசையர்

டோம்பி, அரசரெத்தினம், பொன்ராசா, வாவிக்கரை வீதியைச் சேர்ந்த பூபாலரெத்தினம் (அரங்கம் ஆசிரியர் சீவகனின் தந்தை. அரச வேலையை விட்டுவிட்டு காரோட வந்தவர்), பார்வீதி சிவபாலகுரு, பாடுமீன் வீதி மாணிக்கம் எனப் பெயர்ப்பட்டியல் நீண்டு கொண்டே போகும்.

இவர்களில் எண்பதுகளில் வாடகைக்கார்கள் வைத்திருந்தவர்கள் ஒன்றுகூடி அந்தோணியார் கோவில் வீதியில் சங்கம் ஒன்றை அங்குராப்பணம் செய்திருந்தார்கள். அச்சங்கத்துக்கு தலைவராக ஜெமினி தங்கராசாவும் செயலாளராக இரா.தவராஜாவும் பொருளாளராக உலகசேகரமும் ஏழுபேர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவு செய்யப்பட்டிருந்தது.

முச்சக்கரவண்டி பாவனைக்கு வந்ததும் "மட்டக்களப்பு வாடகைக்கார்கள் சாரதிகள் சங்கம்'' காலவோட்டத்தில் மறைந்து போனது.

(தொடரும்)

# படுவான்கரையின் சாதனைப் பெண்கள்




## படுவான்கரைப் பெண்கள்

மட்டக்களப்பு மாவட்டத்தில் படுவான்கரை, எழுவான்கரையென இருபிரிவுகள் இருக்கின்றன. இதில், படுவான்கரை மக்களே, எழுவான்கரையில் உள்ளவர்களுக்கு உணவளிக்கின்ற உயர்வானவர்களாக இருக்கின்றனர். இங்கு பொய்யாமொழிப்புலவர் கூறிய கருத்தும் ஞாபகத்திற்கு வருகின்றது. 'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம் தொழுண்டு பின்செல்பவர்.' எனக்கூறியிருந்தார். அவர் கூற்றிற்கு வலுச்சேர்க்கின்ற உழவுத்தொழிலைச் செய்பவர்கள்தான் படுவான்கரைப்பிரதேசத்தில் பெரும்பான்மையாக வாழ்கின்றனர். கடந்தகால போர் அனர்த்தங்களினால் பெருமளவில் பாதிக்கப்பட்ட சமூகமும் இதுதான். குறிப்பாக கடந்த மூன்று தசாப்த யுத்தம் இம் மக்களை மோசமாகப் பாதித்திருந்தது. இதனால் பலவற்றினை இழந்திருக்கின்றனர். பொருளாதாரம், கல்வி, போக்குவரத்து என பல துறைகளை பறிகொடுத்த மக்கள் இற்றைவரை விவசாயத்தினை பறிகொடுக்காது, கடன்களைப்பெற்றாவது செய்துகொண்டிருக்கின்றனர். இதேபோல வருடாந்தம் வெள்ளம், வரட்சி என்ற அனர்த்தங்களையும் எதிர்கொண்டு வாழ்வினை வழிநடத்துகின்றனர். இங்குள்ள பெண்கள் சாதிக்கப்பிறந்தவர்கள் என்றே குறிப்பிட முடியும். ஏனெனில் கடந்தகால வரலாற்றை மீட்டிப்பார்த்தால் இப்பெண்களின் சாதனைகள் எண்ணிலடங்காதவை.

படுவான்ரைப் பிரதேசத்தில், பாடசாலைக்கற்றலுடன், விளையாட்டிலும் தம்திறமைகளை வெளிக்காட்டி சாதிக்கும் பெண் வீராங்கனைகளையும் இங்கு குறிப்பிடாமல் இருக்க முடியாது.

தனி விளையாட்டுக்களிலும், குழு விளையாட்டுக்களிலும் படுவான்கரைப்பிரதேச மாணவர்களின் சாதனையென்பது புகழ்ச்சிக்குரியதே. குறுந்தூர ஓட்டங்களில் பன்சேனை பாரி வித்தியாலய மாணவர்கள் மாகாணரீதியாக சாதித்திருக்கின்றனர். தேசியமட்டத்தில் கலந்து சாதித்தும் இருக்கின்றனர். முழுமையாக கஸ்ட, அதிகஸ்ட பாடசாலைகளை உள்ளடக்கிய வலயமாக மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயம் காட்சிகொடுக்கின்றது. இவ்வலயத்தினைச் சேர்ந்த பெண்மாணவர்கள் பல சாதனைகளை நிலைநாட்டி வலயத்திற்கு நற்பெயரினை ஈட்டிக்கொடுத்துள்ளனர். பன்சேனை பாரிவித்தியாலயம், கடுக்காமுனை வாணி வித்தியாலயம், அம்பிளாந்துறை கலைமகள் மகா வித்தியாலயம் போன்றன பெண்களுக்கான உதைபந்தாட்டப்போட்டியில் சாதனைகளை நிலைநாட்டிய பாடசாலைகளாக உள்ளன. அதேபோல நாற்பதுவட்டை விபுலானந்த வித்தியாலயமும் பெண்களுக்கான கிறிக்கட் போட்டியில் மாகாணரீதியில் வெற்றிகளைப் பெற்றிருக்கின்றது. கொல்லநுலை விவேகானந்த வித்தியாலயமும் பெண்களுக்கான கபடி போட்டியில் தேசியமட்டம் வரை சென்று வந்திருக்கின்றது. இச்சாதனைகளும் பெண்களால் மட்டக்களப்பு மேற்கிற்கு கிடைத்த கௌரவமேயாகும்.

தொடர்புகளுக்கு

சீவகன் பூபாலரட்ணம்
seevagan@hotmail.com
(0094713999091)

## பன்சேனைப் பெண்கள்

படுவான்கரைப் பிரதேசத்தில் பன்சேனைப் பாடசாலையென்றால் தனியிடம்தான். அதற்கு காரணம் அங்குள்ள மாணவிகளின் சாதனைதான்.

மட்டக்களப்பு மேற்கில் பன்சேனை கிராமம் எங்கு அமைந்துள்ளது என்பது மட்டக்களப்பிலேயே பலருக்கு தெரியாமலே இருக்கும். அதேபோல எத்திசையில் இருக்கின்றது என்பதும் இன்னும் ஒருசாராருக்கும் தெரியாமலே இருக்ககூடும். பன்சேனை என்ற பெயரினை மாத்திரம் பலரும் தெரிந்திருக்ககூடும்.

பன்சேனைக் கிராமம் மட்டக்களப்பு மாவட்டத்தின் மேற்குப்பகுதியில் உள்ள, மண்முனை மேற்கு பிரதேசசெயலாளர் பிரிவில் உள்ள சிறியகிராமமாகும். இங்கு குடியிருப்புக்கள் ஆங்காங்குள்ள மேடுகளில் அமைந்துள்ளன. கிராமத்தினைச்சுற்றி காடுகளும், வயல்நிலங்களும், சிறிய சிறிய குளங்களும் காணப்படுகின்றன. கூலித்தொழிலையும், விவசாயத்தினையுமே மேற்கொள்ளும் மக்கள் அன்றாடம் பல்வேறு பிரச்சினைகளுக்கும் உள்ளாகின்றனர். போக்குவரத்து, வாழ்வாதாரம், காட்டுயானைகளின் தொல்லை என்பனவே இதில் அதிகமாகும். இக்கிராமத்தில்தான், பாரியின் பெயருடன் வித்தியாலயம் ஒன்றும் அமைந்துள்ளது. தரம் 11வரை கொண்டிருக்கும் இப்பாடசாலையில் பல கிராமத்து மாணவர்கள் கல்வி கற்கின்றனர். பன்சேனை, சில்லிக்கொடியாறு, காலபோட்டமடு, பனையறுப்பான், கண்டியநாறு, வாதக்கல்மடு, சின்னகாலபோட்டமடு என பலகிராமத்து மாணவர்கள் கற்கின்ற வித்தியாலயமே இதுவாகும். இவர்களும் அருகில் இருந்துகொண்டு பாடசாலைக்கு வருபவர்கள் அல்ல '5 கிலோமீற்றர், 4 கிலோமீற்றர், 3 கிலோமீற்றர் என்கின்ற பல கிலோ மீற்றர் தூரங்களிலிருந்து, நடையிலும், துவிச்சக்கரவண்டியிலுமாக இப்பாடசாலைக்கு வருகிறார்கள். இப்படி வருபவர்களும் வறுமைக்கோட்டில் வாழ்பவர்களாகவே உள்ளனர்.

அதேநேரம் இருபக்க காடுகளைகளை கொண்டமைந்த வீதியினாலே போக்குவரத்துச் செய்கின்றனர். நகரத்தில் வாழ்கின்ற பலர், பகல்நேரத்தில்கூட இவ்வீதியால் செல்லுவதற்கு அச்சமுறுவர். அவ்வீதியால்தான் இம்மாணவர்கள் பாடசாலைக்கு காலைவேளையில் வருகின்றனர். வீதியின் ஓரத்தில் காட்டு யானை இருந்தாலும் தெரியாதவகையிலான காடுகளுடன் அமைந்த வீதிகள் இங்கு காட்சிகொடுக்கின்றன. அவ்வாறு இருந்தபோதிலும் இப்பாடசாலையில் கற்கின்ற மாணவிகள் கிழக்கு மாகாணமட்டத்தில் 100 மீற்றர், 400மீற்றர், 800 மீற்றர் , 1500 மீற்றர் ஓட்டப் போட்டிகளில் வெற்றிபெற்றிருந்தனர்.

இம்மாணவர்கள் தம் உடல் வலுவைமட்டும் பயன்படுத்தி செய்யும் விளையாட்டான ஓட்டம் மட்டுமே இவர்களை வெற்றிப்பாதைக்கு இட்டுச் செல்கிறது. உடல்வலுவை மட்டும் பயன்படுத்தி செய்யும் விளையாட்டுக்கும் நல்ல பயிற்சிகளும் வேண்டும். காலை மாலை என இருநேரங்களுமே பயிற்சி செய்வதற்கான உகந்த நேரமாக கொள்ளப்படுகின்றது. ஆனால் அந்நேரங்கள் இம்மாணவர்களுக்கு சாத்தியமற்றுப்போகின்றது.

காலையில் நேரத்தோடு பாடசாலைக்கு சமுகம் கொடுக்க முடியாது. பாடசாலை விட்டும் மாலைநேரத்தில் வீடு செல்லமுடியாது. இதற்கு காட்டுயானையின் தாக்கமும் காரணமாக அமைகின்றது. அச்சத்தின் காரணமாக பயிற்சிக்கான சரியான நேரத்தினை மாணவர்களுக்கு வழங்கமுடியாத துர்ப்பாக்கிய நிலையும் இங்கு காணப்படுகின்றமை கவலைக்குரியதே. ஆனாலும் கிடைக்கும் சந்தர்ப்பங்களை சரியாக பயன்படுத்திக்கொண்டு பயிற்சிகளை அளித்துவருகின்றார் இப்பாடசாலையின் உடற்கல்வி ஆசிரியரான பவளசிங்கம்.

யானையின் பயத்தினாலும், மாடுகளின் பயத்தினாலும் ஓட்ட ஓட்டமாய் பாடசாலையை, வீட்டை அடைய வேண்டுமென்ற எண்ணப்பாட்டின் விளைவே நாளாந்தம் இம்மாணவர்கள் வீதியினால் ஓடிக்கொண்டிருக்கின்றனர். இவ்வோட்டப்பயிற்சியே மாணவர்களின் வெற்றிக்கு பெரும்பங்கு வகிக்கின்றது. சுவர் இருந்தால்தான் சித்திரம் வரையமுடியும் எனக்கூறுவார்கள் அதுபோல உடல் ஆரோக்கியமாகவிருந்தால்தான் விளையாட்டில் சாதிக்க முடியும். இங்குள்ள மாணவர்களில் பலர் போசாக்கு குறைபாடு உள்ளவர்களாக உள்ளனர். இதற்கு சரியான நிறையுணவு கிடைக்கப்பெறாமையும், மாணவர்களின் வறுமை அவர்களுக்கான உணவை இரண்டுநேரமாக குறைந்துள்ளமையும், ஒரேமாதிரியான உணவைத்தான் அவர்கள் தொடர்ந்து உண்கின்ற நிலையினாலும், உடல் வலுவும் குறைவாகவே உள்ளது.

இக்குறைபாடு நிவர்த்தியாக்கப்படுகின்றவேளைதான் சரியானபெறுபேறுகளையும் எதிர்பார்க்கமுடியும். இம்மாணவர்களின் வெற்றியில், பெற்றோர்களின் பங்களிப்பும், உடல்கல்வி ஆசிரியரான பவளசிங்கம் மற்றும் அதிபர் ஜமுனாகரன் ஆகியோரின் வழிகாட்டல்களே பெரும் பங்களிப்பினை செய்து வருகின்றன. உதைபந்தாட்ட குழுவில் அங்கத்துவமாக நின்று சாதிக்கின்ற கி.அசோதினி, கா.கர்சா, இ.துசாந்தினி, இ.கஜேந்தி, வி.லோச்சினி, பா.வசந்தினி, சி.ஏகலா, உ.தர்சினி, நா.விதுஸ்கா, கோ.கதுசினி, ந. காயத்திரி, பு.காயத்திரி, து.ஜெயந்தினி, அ.நிசாந்தினி, ஜீ.லோஜிதா, பே.சத்தியராணி, லோ.பிறைசாந்தினி, இ.யோகிலேஸ்வரி, ற.றவிதா, யோ.குவேதா, கு.பேவிதா, நா.புஸ்பராணி, இ.ரேணுகா ஆகிய வீராங்கனைகளும் கௌரவத்திற்குரியவர்களே. வீட்டின் வறுமைச்சூழலால் இருப்பதற்குகூட வசதியின்றியும், தேவைகளை நிறைவேற்றுவதில் மிகவும் கஸ்டத்தில் உள்ளவர்களாகவும், வருமானமின்றி வாடும் குடும்பங்களைச் சேர்ந்தவர்களாக இம்மாணவர்கள் உள்ளமை மேலும் கவனத்துக்குரியதே.

## அம்பிளாந்துறை கலைமகள்

பன்சேனை பாரி வித்தியாலயத்தின் அமைப்பிலும், பன்சேனை கிராமத்தின் அமைப்பிலும் இருந்து சற்றுவேறுபட்ட இடமாக அம்பிளாந்துறை கலைமகள் வித்தியாலயம் அமைந்துள்ளது. மண்முனை தென்மேற்கு பிரதேசத்தில் உள்ள ஒருகிராமமாக அம்பிளாந்துறை கிராமம் அமைந்துள்ளது. வாவியோரத்தினையும், வயல்வெளிகளையும் கொண்டமைந்த இக்கிராமத்தின் குடியிருப்புக்கள் அருகருகே அமைந்து காணப்படுகின்றன. இங்குள்ள மக்கள் சிலர் அரசதொழில்களைச் செய்கின்ற போதிலும் அநேகமானவர்கள் விவசாயம், கூலித்தொழில் செய்தே வாழ்கின்றனர். இக்கிராமமும் விளையாட்டில் பெயர்போனகிராமமாகவே பார்க்கப்படுகின்றது. அதேநேரம் இக்கிராமத்தில் இருந்து உடற்கல்வி ஆசிரியர்கள் சிலரும் உருவாக்கப்பட்டுள்ளமை வரவேற்கத்தக்கது. இக்கிராமத்தில் இருபாடசாலைகள் அமைந்திருக்கின்றன. ஒருபாடசாலை தரம் 5 வரையான வகுப்புக்களை கொண்ட கனிஸ்ட வித்தியாலயமாகவும், மற்றைய பாடசாலை கணித, விஞ்ஞானத்துறை அடங்கலாக தரம் 13 வரையான வகுப்புக்களை கொண்ட கலைமகள் மகா வித்தியாலயமும் அமையப்பெற்றுள்ளது. இப்பாடசாலையில் கல்வி கற்கின்ற மாணவிகள் உதைப்பந்தாட்டப்போட்டியில் மாகாணரீதியாக வெற்றிகளை நிலைநாட்டிவருவதுடன், தேசியமட்டப்போட்டிகளில் பங்கேற்றும் வருகின்றனர்.

இங்குள்ள மாணவர்களும் தேசிய ரீதியில் சாதிப்பதற்கு பல்வேறு தடைகற்களை தாண்டவேண்டியவர்களாக உள்ளனர். குறிப்பாக சமுர்த்திக் கொடுப்பனவை பெறுகின்ற குடும்பங்களில் வாழும் இம்மக்கள் வறுமையின் பிடிக்குள்ளும் அகப்பட்டிருக்கின்றனர். இதன்காரணமாக ஒழுங்குமுறையான சத்துணவினை பெற்றுக்கொள்ள முடியாதவர்களாக இருக்கின்றனர். இம்மாணவர்கள் காலை, மாலை வேளைகளில் பயிற்சியில் ஈடுபடுவதற்கு சந்தர்ப்பமிருந்தாலும், விளையாட்டின் தொழிநுட்ப ரீதியான நுட்பங்களை பயிற்றுவிப்பதற்கான பயிற்றுவிப்பாளர்கள் இல்லாத நிலையும் மிகக்குறைபாடே. ஆனாபோதிலும் பாடசாலையின் உடற்கல்வி ஆசிரியர் க.நமசிவாயம், அதிபர் சு.தேவராஜன் ஆகியோரின் வழிகாட்டலிலும், பெற்றோரின் பங்களிப்பினாலும் மாணவர்கள் சாதனைகளை நிலைநாட்டி வருகின்றனர்.

கிழக்கு மாகாணத்தில் சாதிப்பதென்பதும் இலகுவான காரியமல்ல. கிழக்கு மாகாணத்திலே எத்தனையோ பாடசாலைகள் இருக்கின்றபோதிலும், அதிலும் குறிப்பாக நகரை அண்டிய வசதிபடைத்த பாடசாலைகள் பலவுள்ள போதிலும் அவ்வற்றினையும் வெற்றி கண்டு மாகாணத்தில் இருபாடசாலைகளும் கடந்த வருடம் பெண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டியில் முதல் இரு இடங்களையும் பெற்றிருந்தமை மிகவும் பாராட்டுக்குரியதே. தேசிய ரீதியாக சாதனைபடைக்க வேண்டுமென்ற அவாவில் இலங்கை நாட்டில் இருக்கக்கூடிய மிகவும் வசதிபடைத்த பாடசாலைகள் பல பயிற்றுவிப்பாளர்களையும், விளையாட்டிற்கான உபகரணங்ளையும், எல்லாவசதிகளையும் கொண்டமைந்த மைதானங்களையும் வைத்துக்கொண்டு தேசியத்தில் சாதிக்க விளைகின்றனர். ஆனால் மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவான்கரைப்பிரதேசத்தில் உள்ள மிகவும் கஸ்டத்தின் மத்தியில் இருக்கின்ற பாடசாலைகள் தமது மனஉறுதியையும், வாழ்க்கையில் கிடைக்கும் நாளாந்த பயிற்சிகளையும் கொண்டு சாதிக்க வேண்டுமென்ற அவாவில் செயற்பட்டுக்கொண்டிருக்கும்.

இப்பாடசாலைகளின் எண்ணங்களை சாதனைகளாக்க அனைவரும் கைகொடுக்க வேண்டும் என்பதே படுவான்கரை மக்களின் எதிர்பார்ப்பு.

**படுவான் பாலகன்**

# விளையாட்டு

## அன்றைய கால்பந்து வீரர் இன்றைய அரச அதிபர்: திரு. மா.உதயகுமார்



கால்பந்தாட்டம் மட்டுநகரைப் பொறுத்தவரை நல்லொழுக்கமும், ஆளுமைத் திறனும் கொண்ட நபர்களை உருவாக்கிய ஒரு விளையாட்டுத் துறையாகத் திகழ்ந்து வந்துள்ளது. மட்டுநகரில் கால்பந்தாட்டம் ஆடிய வீரர்கள் பலர் அரச துறைகளிலும், அரசு சாரா துறைகளிலும் பணியாற்றித் தமது ஆளுமைத் திறன்களை வெளிப்படுத்தி வருகின்றமை இதனை உறுதிப்படுத்துகின்றது.

இந்த வகையில் தற்போதைய மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபராகக் கடமையாற்றுகின்ற திரு மா.உதயகுமார் அவர்களும் தனது இளமைக் காலத்தில் ஒரு சிறந்த கால்பந்தாட்ட வீரராக விளங்கியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

திரு.மா.உதயகுமார் அவர்கள் மட்டக்களப்பு தாண்டவன்வெளிப் பிரதேசத்தை மையப்படுத்தி 1980, 90 களில் இயங்கிய

**து.கௌரீஸ்வரன்**

சுதந்திரன் கால்பந்தாட்டக் கழகத்தின் ஊடாகத் தனது கால்பந்தாட்ட ஆற்றுகைகளை வெளிப்படுத்தியவர்.

தற்போதைய இந்துக்கல்லூரியின் (கோட்டைமுனை மகாவித்தியாலயம்) மாணவனான இவர், பாடசாலைக் காலத்திலும் கால்பந்தாட்டத்தில் பங்குபற்றியுள்ளார். எனினும் இவரை ஒரு கால்பந்தாட்ட வீரனாக அடையாளங்



காட்டியது சுதந்திரன் கழகமே. 1980 களின் பிற்பகுதியிலும் 1990 களின் ஆரம்பக் கட்டத்திலும் சுதந்திரன் கழகம் உள்ளூர் செவணசைட் போட்டிகளில் ஒரு தலைசிறந்த கழகமாகத் தன்னை வெளிப்படுத்தி வந்தது.

குறித்த செவணசைட் போட்டிகளில் அரையிறுதி, இறுதிப் போட்டிகள் வரை முன்னேறி களமாடும் திறமையான அணியாக அந்நாட்களில் சுதந்திரன் அணி திகழ்ந்தது. இந்த அணியில் ஆடிய ஒன்பது வீரர்களும் மிகச்சிறந்த திறன்மிக்கவர்களாக விளங்கினார்கள்.

இந்த ஒன்பது வீரர்களுள் திரு மா.உதயகுமார் அவர்களும் ஒருவராகத் திகழ்ந்தார்.

அக்காலத்தில் கூளாவடி டிஸ்கோ மைதானம், சீலாமுனை யங்ஸ்டார் மைதானம், சின்ன உப்போடை சென் ஜோசப் மைதானம், முகத்துவாரம் லைற்ஹவுஸ் மைதானம், கல்லடி கடல்மீன்கள் மைதானம் என்பவற்றில் அடிக்கடி செவணசைட் போட்டிகள் நடைபெறுவது வழமை. இந்த மைதானங்களில் எல்லாம் சுதந்திரன் கழகம் தனது ஆற்றுகையினைச் சிறப்பாக வெளிக்காட்டியிருந்தது. இந்த ஆற்றுகையில் திரு.மா.உதயகுமார் அவர்களும் தனது ஆற்றல்களைக் காட்டியிருந்தார்.

சுதந்திரன் கழகத்தைப் பொறுத்த வரையில் அது ஒரு கனவான் கழகமாகவே உள்ளூர் செவணசைட் போட்டிகளில் பங்குபற்றி வந்தது. பிற கழகங்களுக்கு ஒரு முன்னுதாரணமாகவே சுதந்திரன் கழக வீரர்களின் நடத்தைகள் பெரும்பாலும் அமைந்திருந்தன.

மறைந்த புகழ்பெற்ற கால்பந்து வீரரான குண்டு மகேசன் அவர்களின் தலைமையில் சுதந்திரன் கழகத்தின் வீரர்கள் சிறப்பான கால்பந்தாட்டத்தை ஆடுவார்கள். சுதந்திரன் கழகத்தின் கோல் காப்பாளர்கள் அந்நாட்களில் மட்டுநகரின் கால்பந்தாட்டத்தில் மிகச்சிறந்த வீரர்களாக அடையாளங் காணப்பட்டனர். ஆண்டவர் என்ற பெயரில் அழைக்கப்பட்ட கோல்காப்பாளர் மிகவும் பிரசித்தமானவராகத் திகழ்ந்தார். அதேபோல் மாதவன் எனும் பெயரில் அழைக்கப்பட்ட மிகத் திறமையான கோல்காப்பாளரும் சுதந்திரன் கழகமூடாகவே வெளி வந்தார். இவ்வாறு சிறந்த வீரர்களுடன் மைதானத்தில் மத்திய கள வீரராகக் களமாடியவரே அந்நாட்களில் உதயன் மாஸ்டர் என அழைக்கப்பட்ட இன்றைய மட்டு அரசாங்க அதிபர் திரு மா.உதயகுமார்.

உள்ளூர் செவணசைட் போட்டிகளில் மாத்திரமன்றி அணிக்கு பதினொருவர் ஆடும் கால்பந்தாட்டத்திலும் சுதந்திரன் கழகம் முன்னிலையில் திகழ்ந்திருந்தது. 1990 களின் பிற்பகுதியில் மட்டு மாவட்ட "ஏ" தர கழகங்களுள் ஒன்றாக சுதந்திரன் கழகம் தன்னை முன்னிலைப்படுத்தியிருந்தது. இந்த அணியிலும் மத்தியகள வீரராக உதயகுமார் களமாடியிருந்தார்.

இவ்விதமாக மட்டுநகரின் கால்பந்தாட்டத்தில் ஆர்வத்துடன் விளையாடிய மட்டு அரச அதிபர் கால்பந்தாட்டம் ஆடுகின்ற இன்றைய இளந்தலைமுறையினருக்கு ஒரு ஆக்கபூர்வமான முன்னுதாரணராக விளங்குகின்றார் எனலாம்.

## அதி வேக பந்துவீச்சாளருக்கான தெரிவில் காரைதீவைச்சேர்ந்த அஜித்குமார் தெரிவு..





(காரைதீவு நிருபர் சகா)

கிழக்கு மாகாண மட்டத்தில், தனியார் தொலைபேசி நிறுவனம் ஒன்றினால் நடத்தப்பட்ட, அதி வேக பந்துவீச்சாளருக்கான தெரிவில் காரைதீவைச் சேர்ந்த செல்வன். சிவகுமார் அஜித்குமார் தெரிவாகியுள்ளார். இவருடைய வேகப்பந்துவீச்சின் வேகம் 118 ஆகும்.

சர்வதேச தரம்வாய்ந்த ஆடுகளத்தில் வேகப் பந்து வீச்சை நிர்ணயிக்கும் நிபுணர்களின் முன்னிலையில் இத்தெரிவு இடம்பெற்றது. அதில் இவர் திறமைகளை வெளிப்படுத்தி தெரிவாகியுள்ளதோடு, தேசிய ரீதியில் கொழும்பில் இடம்பெறவுள்ள தெரிவுப் போட்டிக்கச் செல்லவுள்ளார்.

நேற்று 3-மார்ச் காலை 8மணி முதல் மட்டக்களப்பு கல்லடிஉப்போடை சிவானந்தா மைதானத்தில் நடைபெற்ற இந்த அதி வேக பந்துவீச்சாளருக்கான தெரிவில் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டத்தை சேர்ந்த பல நூற்றுக்கணக்கான வீரர்கள் கலந்துகொண்டனர். பலத்தபோட்டி நிலவியது. அதில் காரைதீவு வீரன் சி.அஜித்குமார் தெரிவாகியுள்ளார்.

அஜித்குமார் காரைதீவு விபுலாந்த மத்திய கல்லூரி உயர்தர பிரிவில் கல்வி கற்கும் மாணவராவார். சிறந்த கிரிக்கட் வீரரான இவர் காரைதீவு விளையாட்டு கழக வீரருமாவார்.

## புளியந்தீவு ரிதத்தின் பிறிமியர் லீக் கிரிக்கட்



மட்டக்களப்பு - புளியந்தீவு ரிதம் இளைஞர் கழகத்தின் 14வது ஆண்டு நிறைவை முன்னிட்டு ரிதம் பிறிமியர் லீக் மென்பந்து கிரிக்கட் சுற்றுப் போட்டி, கழகத்தின் ஆலோசகரும், மாநகரசபை உறுப்பினருமான அந்தோனி கிருரஜனின் வழிகாட்டல் மற்றும் தலைமையில் திங்கட்கிழமை (04) இடம்பெற்றது.

கழக உறுப்பினர்களுக்கிடையில் அணிக்கு 10 பேர் கொண்டதாக 04 அணிகள் உருவாக்கப்பட்டடு இச் சுற்றுப் போட்டி நடாத்தப்பட்டது. ரிதம் சுப்பர் கிங்ஸ், ரிதம் ரோயல்ஸ், ரிதம் ரைடர்ஸ், ரிதம் சார்ஜஸ் என அணிகள் பிரிக்கப்பட்டு இரண்டு நாட்கள் இப்போட்டிகள் இடம்பெற்றன. இதன் இறுதியாட்ட நிகழ்வு திங்கட்கிழமை மாலை இடம்பெற்றது.

இச்சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் ரிதம் சுப்பர் கிங்ஸ் மற்றும் ரிதம் ரைடர்ஸ் அணிகள் மோதின இதில் ரிதம் ரைடர்ஸ் அணியினர் இறுதிப் போட்டியில் வெற்றியீட்டி வெற்றிக் கிண்ணத்தைக் கைப்பற்றினர்.

பக்க அனுசரணை : கோட்டைமுனை விளையாட்டுக் கழகம்
Koddamunai Sports Club
Batticaloa



## துட்டப் பிசாசுகளை நல்ல தெய்வங்கள் கலைக்கின்ற தன்மை வாய்ந்த சமயச் சடங்குகள் *

ஒருவருக்கு ஏதேனும் நோய் வந்திருப்பின் அந்த நோய்க்கான காரணம் காற்றணைவு, துட்டப்பிசாசுகளின் சேர்க்கை, பேய்ப்பார்வை என எண்ணி ஆண்டுப் பூசை நடக்கும் கோயில்களுக்கு அவரை உறவினர் கொண்டு வைத்திருப்பர். அத்தகையவருக்குப் பிடித்துள்ள துட்டப்பிசாசினை அக்கோயிலுக்குரிய பெரும் கிராமியத் தெய்வம் ஒட்டுவிக்கும். இது சுவையான ஓர் சடங்காகும்.

துட்டப்பிசாசு பிடித்தவர் கோயிலில் காளி பந்தலுக்கு அழைத்து வரப்படுவார். பூசாரிமார் சூழ பெரும் கிராமியத் தெய்வமான காளிக்கு ஆடுபவர் அவ்விடம் வந்து நின்று, காளிக்கு உருவேறி ஆடி, பேய் பிடித்து இருப்பவரையும் ஆடவைப்பார். ஆடிக்கொண்டிருக் கையில் உச்சமான ஆட்ட நேரத்தில் பூசாரியார் பேய் பிடித்து ஆடுபவரிடம்

"நீ என்ன தெய்வம்?"

என்று விசாரிப்பார். துட்டப் பிசாசுக்கு ஆடுபவர் சிரித்தபடியே தான் மாரியம்மன் என்றோ, காளி என்றோ, கங்காதேவி என்றோ நல்லதெய்வம் ஒன்றின் பெயரைக் கூறுவார். அதன் உண்மை,பொய் அறிவதற்காக காளிக்கு ஆடுபவரும், பூசாரியும் கலந்து பேசி பேய்க்கு ஆடுபவருக்குத் தெரியாத வகையில் மூன்று பூக்களை மடையில் வைப்பர். அந்த மூன்று பூக்களில் ஒன்று காளிக்குரியது. அது பூசாரிக்கும், காளிக்கு ஆடுபவருக்கும் மட்டுமே தெரியும்.

பூக்களை வைத்த பின்னர் பூசாரியாரும், தெய்வம் ஆடுபவரும் பேய் பிடித்தவரை பார்த்து

"நீ காளியாயின் காளிக்குரிய பூவை எடு"

என்று கூறுவார். துட்டப் பிசாசுக்கு அப்பூ தெரியாதாகையால் அது பிழையான பூவையே எடுக்கும். உடனே காளிக்கு ஆடுபவர் தன் கையில் வைத்திருக்கும் சாட்டைக் கயிற்றினால் பேய் பிடித்தவருக்கு அடிப்பார்.

அடிநோதாங்க முடியாமல் அவர் துடித்தாலும் மீண்டும் ஒரு நல்ல தெய்வத்தின் பெயரைக் கூறுவார்.

மீண்டும் அடையாளம் வைக்கப்பட்டு அதனை எடுக்கும்படி அவர் வேண்டப்படுவார்.

மீண்டும் பிழையாக எடுத்து அடிபடுவார். இவ்வண்ணம் பல தடவைகள் மீண்டும் மீண்டும் எடுத்து, தான் உண்மையாக நல்ல தெய்வம் அல்ல என்பதை அவர் ஒத்துக் கொண்டு இன்ன பிசாசு என்று பெயரையும் குறிப்பிடுவார்.

உடனே பூசாரி அவரிடம் "நீ இவரைவிட்டுப் போக வேண்டுமானால் என்ன தரவேண்டும்"

என்று கேட்பார். அதற்கு அவர் இன்ன இன்ன என்று அதிகமான பொருட்களைக் கூறுவார். ஆட்டுப் பலி, கோழிப்பலி, பலகாரம், சாராயம் என்பன இவற்றுள் அடங்கும். பூசாரியார் அத் தெய்வத்துடன் பேரம் பேசி பேய் பிடித்தோரின் குடும்ப நிலையையும் விளக்கி பொருட்களின் தொகையைக் குறைக்கும்படி வேண்டுவார். துஷ்டப்பிசாசு ஒருபடியாக ஒத்துக்கொண்டு குறிப்பிட்ட பொருட்கள் கொடுக்கும் வரை கட்டுப்பட்டு நிற்பேன் என்று சத்தியம் பண்ணும்.

தண்ணீர் வார்த்துக் சத்தியம் செய்ததும்,

"நீ எங்கே நிற்கிறாய்?'

என்று பூசாரியார் கேட்க

அப்பேய் பிடித்து ஆடுபவர் தன் தலையைக் கையாற் கோதி ஒரு கற்றை மயிரைப் பிடித்துக் கொடுப்பார். அதனைப் பிடித்துக் காளிக்கு ஆடுபவர் ஒரு சீலைத் துண்டினாற் கட்டுவார். துட்டப் பிசாசு கட்டுப்பட்டுவிட்டது என்பது இதற்கு அர்த்தம்.

பின்னர் கோயிற்சடங்கு முடிய, சவக்காலைக்கு அவரை அழைத்துச் சென்று துட்டப்பிசாசு கேட்டவற்றைப் பூசாரியாரும் காளிக்கு ஆடியவரும் கொடுத்து தலையிற் கட்டிய தலைமயிரை நறுக்கி எறிவர். துட்டப்பசாசு பிடித்தவர் உடனே "ஹோ" என்று அலறி வீழ்வார். அத்துடன் அவரைப் பிடித்திருந்த பிசாசுசென்றதாகக் கொள்ளப்படும்.

இதிலும் தெய்வமும், பூசாரியும் உரையாடுவதும், நடைபெறும்.

மேலே குறிப்பிட்ட சடங்குகள் யாவும் கோயில்களில் நடைபெறும் சடங்குகளாகும். நரசிங்க வைரவர் கோயில் அமைப்பை ஒட்டியே பெரும்பாலான சிறு தெய்வ வணக்கக் கோயில்கள் அமைந்துள்ளன. ஆண்டுப் பூசை தொடங்கி முடியுமட்டும் தெய்வம் ஆடுபவர்கள் கோயில்களின் பின்னால் இடம் அமைத்து தங்கியிருப்பதும்,




குளித்து கொடுக்கணிந்து தெய்வம் ஆடச் செல்வதும், சிலம்பணிந்து, வேப்பிலை ஏந்தி, உடுக்கு, சிலம்பு, தவில் ஒலிக்கேற்ப காவியம், சிந்து இசைக்குத் தக ஆடுவதும், பெரிய கோயிலுள் ஆடி முடிந்ததும், அவ்வக் கோயில்களில் உள்ள சிறு தெய்வங்கள் வந்து முற்படுவதும் இங்குள்ள பொது வழக்கமாகும்.

இவ்வண்ணம் பந்தலுக்குப் பந்தல் ஆடுகையிலும், பெரும் காட்சிகள் நடைபெறுகையிலும் மக்கள் சூழ இருந்து அக்காட்சிகளைப் பார்வையிடுவதும் எல்லாக் கோயில்களிலுமுள்ள வழக்கமாகும். காளி கோயில்களிலே தீப்பாய்தல் பெரும் காட்சியாக நடைபெறும்.

கண்ணகை அம்மன் கோயிலிலே கலியாணக்கால் நாட்டி, கண்ணகி கோவலன் திருமணம் செய்வதும், குளுத்தி பாடுவதும், பெரும் காட்சியாக இருக்கும். மாரி அம்மன், கடனாச்சி அம்மன் கோயில்களில் குளுத்தியுடன் பள்ளயம் செய்தல், பெரும் காட்சியாக இருக்கும். இத்தகைய பெரும் காட்சிகள் ஒவ்வொரு கோயிலுக்கும் உரிய சிறப்பம்சமாகும். குறிப்பிட்ட சாதியினரின் பாரம்பரியம், அவர்களின் தொழில், அவர்கள் வாழும் சூழல் இவற்றிற்கு ஏற்ப அக்காட்சிகள் உருவாவதுடன் அவற்றின் அமைப்பினையும் இவை பாதித்திருக்கும். உதாரணமாக எறாவூரில் இருக்கும் காளிகோயிலில் தீப்பாய்தலுக்கு முன் வெறுமனே கிணற்றில் நீராடிவிட்டு வந்து தீப்பாய்வர். ஆனால் கடற்கரை ஓரமான புன்னைச் சோலையில் இருக்கும் காளி கோயிலில் கடலிற் குளித்து தெய்வக்காரர் அங்கிருந்து வந்தே தீப்பாய்வர். இங்கு இயற்கை சூழல், காட்சியின் அமைப்பினை மாற்றுவதை காணலாம்.

மேலே குறிப்பிட்ட கோயிலிற் பெரும் காட்சிகள் செய்யப்படும் முறை முக்கியமானது. பங்குகொள்வோர் வேறு, பார்வையாளர் வேறு என்று சில நிலைகளிலும், பங்கு கொள்வோரும் பார்வையாளரும் இணைந்து சில நிலைகளிலும் இவை நிகழ்த்தப்படும்.

இத்தகைய சடங்கு முறைகளை தென் ஆசிய நாடுகளிலும் தென்கிழக்காசிய நாடுகளிலும் காணுகிறோம். அப்பகுதிகளில் வாழும் சில இனக்குழுமங்களிடையே இதேபோன்ற வேறு வகையான சடங்கு முறைகள் உள்ளன. இவற்றை நுணுக்கமாக ஆராய்வதன் மூலம் அச்சடங்கை நிகழ்த்தும் மக்களின் வரலாறும், பண்பாடும் சமூக உளவியல் என்பனவற்றை அறிய ஆய்வாளர்கள் முயன்றனர். அப்படி ஆய்வுகள் வந்துள்ளன என்பதையும் நாம் மனம் கொள்ள வேண்டும்

(தொடரும்)

**வியப்பிலாழ்த்தும் மட்டக்களப்பு ஆகமம் சாரா தெய்வ வழிபாட்டுமுறைகளும் சடங்குகளும் 18**

--- பேராசிரியர் சி. மௌனகுரு ---

## மட்டக்களப்பின் வியக்க வைக்கும் சடங்குகள் எனும் கட்டுரைத் தொடர் பற்றி வாசகருடனான ஓர் உரையாடல்

மட்டக்களப்பின் வியப்பூட்டும் சடங்குகள் எனும் தலைப்பில் நான் எழுதிவரும் கட்டுரையை வரவேற்று எனக்கு நேரிலும் தொலைபேசியிலும் தொலைநகலிலும் முகநூலிலும் பலர் செய்திகள் அனுப்பியுள்ளனர். அவர்களுக்கு எனது நன்றி.

**சி, மௌனகுரு**

அவற்றை நான் நாடகம் எனக் கூறுகிறேன் எனவும் சிலர் தமது வருத்தத்தைத் தெரிவித்துமுள்ளனர்.

இலக்கியம், கட்டிடம், நாடகம், ஓவியம், இசை ஆகிய கலைகளின் பிறப்பிற்கான கருப்பை இந்த சமயச் சடங்குகளே ஆகும். அத்தோடு அச்சமூக மக்களின் வரலாறும் பண்பாடும் அச்சடங்குகளில் பொதிந்துள்ளன.

எந்தக் கோவிற்சடங்கை எடுத்து நோக்கினும் இக்கலை அம்சங்களும் வரலாற்று அம்சங்களும் பண்பாட்டு அம்சங்களும் நிறைந்தே இருக்கும். இவற்றைப் பல ஆய்வாளர்கள் உலகம் பூராவும் வெளிகொணர்ந்துள்ளனர்

எனது இத்தொடர் கட்டுரையில் அச்சடங்குகளின் நிகழ்த்து முறைகளும் அச்சடங்குகளில் காணப்படும் அற்புதமான அந்தக் கலை அம்சங்கள் பேசப்படுகிறதேயொழிய அவை நாடகம் என்று கூறப்படவில்லை என்பதனைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

அச்சடங்குகள் அம்மக்களின் ஊனோடும் உதிரத்தோடும் ஊறி நிற்பவை. காலம் காலமாக சிற்சில மாற்றங்களோடு இயங்கி வருபவை. அவை நாடகங்கள் என நான் கூறுவதான எண்ணங்கள் வாசகருக்கோ அச்சடங்குகளை நிகழ்த்துபவருக்கோ ஏற்பட்டு அவர்களுக்கு அது மன வருத்தத்தை ஏற்படுத்தியிருப்பின் என்னை அவர்கள் மன்னிக்கவேண்டும். அவை நாடகங்கள் அல்ல சடங்குகளே என்பது எனது திடமான அபிப்பிராயம். நாடகத் தன்மை அவற்றில் காணப்படுகிறதே ஒழிய அவை நாடகங்கள் அல்ல. நாடகம் வேறு சடங்கு வேறு.

மட்டக்களப்புப் பண்பாட்டின் அடிஅம்சமாகியதும் ஆரியக் கலப்பில்லாது இன்றுவரை இங்கு நிலவிவருவதுமான மட்டக்களப்பிற்கேயுரிய இவ்வணக்க முறைகளை மட்டக்களப்புக்கு வெளியே வாழும் தமிழ் மக்களுக்கு அறிமுகம் செய்வதே இக்கட்டுரைத் தொடரின் நோக்கமாகும்.

## சமுர்த்தி சங்கங்கள் நடாத்தும் இரத்ததான நிகழ்வு




(ஜெயா)

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு மயிலம்பாவெளி - தன்னாமுனை சமுர்த்தி சங்கங்கள் இணைந்து இரத்ததான நிகழ்வொன்றை மார்ச் - 8 அன்று நடாத்தவுள்ளன. இந்நிகழ்வுக்கு கோட்டைமுனை விளையாட்டு கழகம் அனுசரணை வழங்கவுள்ளது.

சமுர்த்தி திட்டத்தில் சர்வதேச தினங்களை அனுஸ்டிப்பது வழமையான விடயமாகும். அதன் நிமித்தம் இக்கிராமங்களில் இயங்கும் 15 சமுர்த்தி சங்கங்களும் இணைந்து இந்த இரத்ததான நிகழ்வை நடாத்த திட்டமிட்டுள்ளனர். தற்போது மட்டக்களப்பு இரத்த வங்கியில் இரத்தத் தட்டுப்பாடு நிலவுவதால் முடிந்தவரை இரத்ததான நிகழ்வில் கலந்து கொண்டு இரத்ததானம் செய்யுமாறு அனைவருக்கும் இச்சங்கங்களின் தலைவிகள் அன்பு வேண்டுகோள் விடுத்துள்ளனர். ஒரு துளி இரத்தம் கொடுத்து ஓர் உயிரை காப்பாற்ற நாமும் முன்வருவோம். ஏதிர்வரும் 08ம் திகதி மயிலம்பாவெளி சமுர்த்தி அலுவலர் அலுவலகத்தில் காலை 9மணி தொடக்கம் மதியம் 2மணி வரை இந்நிகழ்வு இடம்பெறும். தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்

# ஈழ நாட்டியம் வேர்களிலிருந்து விரியும் நம் கலை அடையாளம்

ஈழ நாட்டியம் இன்று உருப்பெற்று உலகப் பரப்பில் ஈழத் தமிழர்களின் கலைத்துவ தனித்துவ முகமாய் நம் ஆடல் வடிவமாய் அடையாள தெறிப்பாய் நம் வேர்களிலிருந்து விருட்சம் என வெடித்து கிளை விடும் நம் ஆடல் வகை.

02.03.2019 பிரான்சின் ஒன்லி சுபா பிராந்திய தமிழ் சோலைப் பள்ளி ஆண்டு விழா அரங்கில் ஈழ நாட்டியம் அரங்கேறிய காட்சிகள்.



தங்களுக்கான கலையை தங்கள் கையில் எடுக்கிறோம் என்ற மகிழ்வும் ஆர்வமும் மேலிட ஆடல் பயிற்சிகளில் ஈடுபட்ட மாணவர்கள் ஒரு வரலாற்று திருப்பு முனைக்கான திறவுகோலின் ஒரு முனையாய் இயங்கும் மகோன்னத மனோ நிலையுடன் அரங்கு கண்டனர்.

அரங்கு நிறைந்த கூட்டம் நிகழ்வு தொடங்கும் போது ஆரவாரம் அடங்கி பார்வையாளர்களின் கடைசி இருக்கை கூட அரங்கை நோக்கிய கண்ணிமையா கவனத்துடன் இருக்க, ஈழ நாட்டியம் இருபது நிமிட அளிக்கையாய் எல்லோர் மனதிலும் எங்கள் நடனம் என்ற இருப்பை விதைத்து நின்றது.

**பாலசுகுமார்**

ஆரவார கரகோசம் அரங்கை அதிர வைக்க பார்த்தவர்கள் பரவசப்பட்டு நின்றனர்.

ஒவ்வொருவரும் உணர்ச்சி மயமான அபிப்பிராயங்களை சொல்லிக் அளிக்கையாளர்களை ஆரத் தழுவிய காட்சிகள் ஈழ நாட்டியத்துக்கான அங்கீகாரமாய் மகிழ்வின் பிரவாகத்தை மனதில் பரவ விட்டு இன்னமும் இன்னமும் நாம் செல்ல வேண்டிய பாதை நீண்டதும் பொறுப்பு மிகுந்ததும் என்பதை உணர்த்தி நின்றது.

எண்பது வயது முதியவர் ஒருவர் என் கையைப் பிடித்து முத்தமிட்டு சொன்னார்

"என் மண்ணில் நிற்பது போல் உணர்கிறேன் " என்றார்

மற்றொருவர் "எங்களுக்கான வடிவம் என்ன உதவி வேணுமோ சொல்லுங்க " என்றார்.

கூத்து விடிய விடிய ஆடப்படுவது. "ஈழ நாட்டியம் " ஒரு ஐந்து நிமிடம் தொடக்கம் ஒரு மணித்தியாலம் வரை நீளக் கூடியது .

பேராசிரியர் வித்தியானந்தன் விடிய விடிய வட்டக் களரியில் ஆடிய கூத்தை மணிக் கணக்கில் சுருக்கி படச்சட்ட மேடைக்கு கொணர்ந்தார்.

நான் இன்றைய சர்வதேச அரங்க நியமங்கள் வழியில் பல நிமிடங்களில் ஆட்டக் கோலங்களாலான ஈழ நாட்டியத்தை அறிமுகப்படுத்தியுள்ளேன் உடை, ஒப்பனை என எல்லாவற்றிலும் ஒரு புதிய மொழியாய் ஈழ நாட்டியம் நம் மரபிலிருந்து இன்னமும் பெற வேண்டிய கூறுகள் உள்ளன . ஈழ நாட்டியத்துக்கான இந்த உடையும் ஒரு அறிமுகமே. மேலும் இது மெருகு பெற வேண்டும் குறுகிய காலத்தில் இவை தயாரிக்கப்பட்டன .ஈழ நாட்டியம் இதை செய்ய பாலசுகுமார் யார் என்ற முணு முணுப்பு ஒரு சிலரின் வாய்களில் வந்து போகின்றமை நான் அறிவேன் .எனக்கு எல்லா தகுதியும் இருக்கிறது என நான் துணிந்து கூறுவேன் . ஐரோப்பாவில் நாடக ஜாம்பவான் ஒருவர், "ஈழ நாட்டியம்அதுக்கு பல்கலைக் கழக அங்கீகாரம் தேவை மௌனகு குரு தொடங்கிப் போட்டு விட்டிற்றார் இவர் எப்படிச் செய்யப் போறார்" என்று சொல்லியிருக்கிறார். ஒரு கலை வடிவமும் அதன் உருவாக்கமும் மக்களிடமிருந்தே பிறக்கின்றன. பல்கலைக் கழகம் அங்கீகரிக்க வேண்டிய எந்த அவசியமும் இல்லை. பேராசிரியர் மௌனகுரு ஈழ நாட்டியம் என்ற சொல்லாடலை பயன்படுத்தவே இல்லை. ஆனால் ஈழ நாடியத்துக்கான அடிப்படைகள் அவர் ஆற்றுகைகளில் வெளிப் பட்டன. அவரே என் ஈழ நாட்டிய கருத்துருவாக்கத்துக்கான உந்துதல்.

ஈழ நாட்டியம் என்ற கருத்துருவாக்கத்துக்கான ஆரம்ப முயற்சி 2009ஆம் ஆண்டு ஜனவரியில் கருக் கொண்டது. தோழர் கி.பி அரவிந்தன், தோழர் முகிலன்(முகுந்தன்) இந்த முயற்சிக்கான முதல் கல்லாய் இருந்தனர். சிலம்பு வருடம் தோறும் நடத்தும் பொங்கல் விழாவில் அரங்காற்றுகைக்கான பயிற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. பாரிசில் நீண்ட காலம் பரத நாட்டிய வகுப்புகளை நடத்தி வரும் தனிசா அவர்களின் மாணவர்கள் கலந்து கொண்டனர். ஆனால் அன்றைய அரசியல் சூழல் அந்த நிகழ்வை நடத்த முடியாமல் போயிற்று. இன்று பத்து வருடம் கழித்து அன்று போட்ட முதல் புள்ளி இன்று நனவாகியிருக்கு. பாரிசில் தங்கள் அர்ப்பணிப்பால் ஈழத் தமிழர் கலைச் செயற்பாடுகளில் மிகுந்த அக்கறையுடன் செயற்படும் நல்லையா வாசுகி தம்பதிகள் ஈழ நாட்டிய ஆற்றுகை வெற்றிக்கு உறு துணையாய் இருந்தனர். ஒன்லி தமிழ்ச்சோலைப் பள்ளி அதன் நிர்வாகிகள் இங்கு முக்கியம் பெறுகின்றனர்.ஈழ நாட்டிய நிகழ்வில் தங்கள் பிள்ளைகளை ஈடுபடுத்திய பெற்றோருக்கு என் பாராட்டுகள்.

பங்கு கொண்ட பதினொரு மாணவர்கள் ஒரு வரலாற்று பாய்ச்சலை நிகழ்த்தியிருக்கிறார்கள்.

என் சிறு வயதில் சாலையூரில் "வள்ளிக் கூத்தை" பார்த்து வளர்ந்தவன். வளர நானே ஆடகனாய் அறிமுகமாகிய அரங்குகள் பல நூறு.

பேராசிரியர்கள் கைலாசபதி, சிவத்தம்பி,

தொடர்ச்சி... (பக்கம் -06 )






## அறிவோம் – தெளிவோம் – பகிர்வோம் – 26

### க.பொ.த. (உ/த) – புதிய பாடத்திட்டம் – தமிழ்

- மட்டுநகர் யுவன் -

சென்ற வாரம், வினாத்தாள் IIக்குரிய (தமிழ் II) கட்டாய வினாக்களுள் வினா 1ஐப் பார்த்தோம். இவ்வாரம், வினா 2 (அ), (ஆ), வினா 3 ஆகியன தரப்படுகின்றன. இவை, மாதிரிவினாக்கள் என்பதைக் கவனத்திற்கொள்க.

2. (அ) பின்வரும் உரைப்பகுதியை **50** சொற்களில் சுருக்கி எழுதுக.

எம்முடைய மனத்தின் பண்புகளுள் முக்கியமானவை இரண்டு. ஒன்று, எடுத்துக்கொண்ட காரியத்தைத் தர்க்க முறைப்படி ஆராய்தல் மற்றது, உணர்ச்சி வசப்பட்டு நிற்றல். அவை யிரண்டும் ஒன்றற்கொன்று மாறுபட்டவை யெனினும் நாம் அறிவைப் பெறுதற்கு அவை இன்றியமையாதவை. எம்முடைய புத்தியானது ஒன்றை ஆராய்ந்து அறிய முற்படும் போது அந்நேரத்தில் உணர்ச்சிக்கு இடமில்லாமற்போகிறது. உணர்ச்சி விஞ்சும் போது ஆராயும் சக்தி மங்கிப்போகிறது. ஒன்று துயில மற்றது விழிப்பாயிருத்தல்தான் மனத்தினுடைய பொதுவான இயல்பு. உணர்வாற்றலின் துணைகொண்டு ஒன்றைக் கிரகிக்க முற்படும் நேரத்தில் ஆராய்ச்சியறிவு துயிலப் பெறவேண்டும். தர்க்க முறைப்படி ஒன்றை ஆராய்ந்து அறிய வேண்டிய நேரத்தில் உணர்ச்சி வசப்பட்டு நின்றால், எமது முயற்சி அனுகூலப்படாதாதலின், அந்நேரத்தில் உணர்ச்சிக்கு இடங்கொடுத்தல் கூடாது.

புலவன், கவிதை வாயிலாகத் தன் உணர்ச்சி அனுபவங்களை வெளிப்படுத்துகிறான். அவற்றை நாம் பெறுவதாயின் நம்முடைய உணர்ச்சி யறிவைத்தான் உதவியாகக் கொள்ளுதல் வேண்டும். புலவன் அதை அறிந்து, எம்முடைய ஆராய்ச்சி யறிவைச் சற்றுத் துயிலச்செய்யும் பொருட்டு ஒலியை உபயோகிக்கிறான். திரும்பத் திரும்ப வரும் ஒலியமைப்பில் எமது ஆராய்ச்சி யறிவைத் துயிலச்செய்யும் சக்தி உண்டு. அது காதில் விழுந்தவுடனே எம்முடைய மனம் ஒடுங்குகிறது. சிறந்த ஒலியமைப்பில் நாம் மட்டுமல்ல, பறவைகளும் விலங்கினங்களும் பாம்புகளும் கட்டுப்படுகின்றன. அவ்வாறு எம்முடைய மனம் ஒடுங்கி 'லயப்பட்டு' நின்றாலன்றி, புலவன் புலப்படுத்தக் கருதிய அனுபவத்தை நாம் பெறமுடியாது. மனம் ஒருப்படாத நிலையில் திரும்பத் திரும்ப வரும் ஒலியிலுள்ள அந்த மந்திரசக்தி எம்மிடத்திற் பலிக்கமாட்டாது. ஆகவே, கவிதையைப் படித்துப் பயனடைய விரும்புவோர், அதன் ஓசையில் உள்ளத்தைத் தோயவிடுதல் அவசியமாகிறது.

(13 புள்ளிகள்)

(ஆ) பின்வரும் உரைப்பகுதியைப் படித்து, அதன்கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

தம்பி! இயற்கையிலிருந்து நாம் ஒரு பெரிய பாடம் கற்றுக்கொள்ள வேண்டும். வாழ்க்கைப் பகுதியில் ஒன்றை மட்டும் போற்றுகின்றவன் உருப்படியாவதில்லை. உடலை மட்டும் போற்றி உரமாக வைத்திருப்பவனும் அழிகிறான். அவனுடைய உள்ளம் அவனுக்குப் பகையாகி அவனைத் தீய வழியிற் செலுத்திக் கெடுத்து அழிக்கிறது. உள்ளத்தை மட்டும் தூய்மையாகப் போற்றிக் காப்பாற்றுகிறவனும் இடையே அல்லற்படுகிறான் அவனுடைய உடல் பல நோய்க்கிருமிகளுக்கு இடங்கொடுத்து அல்லற்படுகிறது. உடலும் வேண்டும் உள்ளமும் வேண்டும் என்று இரண்டையும் உரமாகவும் தூய்மையாகவும் காப்பதே கடமையாகும். மரம் வானளாவ உயர வேண்டியதாக இருக்கலாம் ஆனால், தான் வேரூன்றிய மண்ணை மறந்து வாழமுடியாது வானைப் புறக்கணித்துக் கிளைகளை உயர்த்தாமல் வாழவும் முடியாது. இந்த உண்மையை நன்றாக உணர்ந்தவர் திருவள்ளுவர். அறநெறியும் வேண்டும், பொருள் வளமும் வேண்டும், இன்ப வாழ்வும் வேண்டும் என்று உணர்த்தும் நூல் திருக்குறள். அறத்தை நினைத்துப் பொருளை மறக்கும்படியாகத் திருவள்ளுவர் கூறவில்லை. பொருளையோ இன்பத்தையோ போற்றி அறத்தை மறக்கும்படியாகவும் அந்தப் பெருந்தகை கூறவில்லை. உலகத்து நூல்களில் பல, அறம் பொருள் இன்பம் மூன்றில் ஒவ்வொன்றை மட்டுமே வலியுறுத்தியிருப்பதைக் காணலாம். வாழ்க்கையின் பல பகுதிகளையும் போற்றி வாழ வேண்டும் என்பதை உணர்த்த வந்த திருவள்ளுவர், இந்த மூன்றையும் தெளிவுறுத்தியுள்ளார். திருக்குறளைப் பெற்றிருக்கிறோம். நம்மிற் சிலர் அந்த நூலைக் கற்றும் இருக்கிறோம். ஆனால் திருவள்ளுவர் கூறியபடி வாழவில்லை நல்ல தன்மை தேடுகிறோம் வல்லமை தேடவில்லை. அதனால்தான் தாழ்வுறுகிறோம்.

(i) இயற்கையிலிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டியது என்னவென்று ஆசிரியர் கூறுகிறார்?
(ii) திருவள்ளுவர் உணர்ந்த உண்மை யாது?
(iii) மற்றைய நூல்களிலிருந்து திருக்குறள் எவ்வாறு வேறுபட்டு நிற்கிறது?
(iv) ஆசிரியரின் ஆதங்கம் யாது?
(v) நாம் தாழ்வுறுவதற்கு ஆசிரியர் முன்வைக்கும் காரணங்கள் யாவை?
(vi) பின்வரும் தொடர்களின் பொருளைச் சுருக்கமாக விளக்குக.
(1) உரம் (2) உருப்படியாவதில்லை

(12 புள்ளிகள்)
(13+ 12 = 25 புள்ளிகள்)

3. பின்வருவனவற்றுள் யாதேனும் ஒரு தலைப்பைம் தெரிந்து, **300 - 350** சொற்கள் கொண்ட கட்டுரை எழுதுக.

(அ) அதிகரித்துவரும் போதைப்பொருட் பாவனை.
(ஆ) தொலைபேசிக்குள் மூழ்கும் சமூகம்.
(இ) தொலைக்காட்சியால் தொலையும் நேரம்.
(ஈ) வீதிவிபத்துக்களும் விளைவுகளும்.
(உ) விழுமியங்கள் இன்றியமையாதவை

(25 புள்ளிகள்)

# கற்போம்

## உயிர் அங்கிகளின் மூலக உள்ளடக்கம்

குணம் சவரிராஜா

**02 தொடர்ச்சி...**

40. அங்கிகளில் காணப்படும் பிரதான பல்சக்கரைட்டுக்கள், அவற்றை ஆக்கும் ஒருபாத்துகள். அவற்றின் தொழில்கள் ஆகியவற்றைக் குறித்துக் காட்டும் ஒரு அட்டவணை தயாரிக்க.

| பல்சக்கரைட்டு | ஒருபாத்து | தொழில் |
|---|---|---|
| மாப்பொருள் | குளுக்கோஸ் | தாவரங்களில் சேமிக்கப்பட்டிருக்கும். |
| கிளைக்கோஜன் | குளுக்கோஸ் | விலங்குகளிலும், பங்கசுக்களிலும் சேமிக்கப்பட்டிருக்கும். |
| செலுலோஸ் | குளுக்கோஸ் | கலச்சுவர்க் கூறு |
| இனூலின் | பிரக்டோஸ் | *Dhalia* முகிழுருக்களில் சேமிக்கப்பட்டுள்ளது. |
| பெக்டின் | கலக்ற்யூரோனிக் அமிலம் | தாவரக்கலச்சுவரின் நடுமென்றட்டின் கூறு |
| அரைச்செலுலோஸ் | பெந்தோஸ் | தாவரக்கலச்சுவரின் கூறு |
| கைற்றின் (நைதரசனைக் கொண்ட பல்சக்கரைட்டு) | குளுக்கோசமின் | பங்கசுக் கலச்சுவர்களினதும், ஆத்துரப்பொட்டுக்களினது புறவன்கூட்டினதும் கூறு |

41. காபோவைதரேற்றுகளின் பிரதான வகைகளைக் குறிப்பிட்டு, அவற்றின் தொழில்களை உதாரணங்களுடன் தருக.

**ஒருசக்கரைட்டுகள்**

- சக்தி மூலம்
- இருசக்கரைட்டுக்களினதும் பல்சக்கரைட்டுக்களினதும் கட்டடக் கூறுகள் (மோல்றோஸ், சுக்குரோஸ் போன்ற இருசக்கரைட்டுகள் மற்றும் மாப்பொருள், கிளைக்கோஜன் போன்ற பல்சக்கரைட்டுகள்)
- நியூக்கிளியோரைட்டுக்களின் கூறுகள் (னுயேஇ சுயே)

**இருசக்கரைட்டுகள்**

- பாலில் சேமிப்பு வெல்லம் - இலக்றோஸ்
- உரியத்தில் கடத்தல் - சுக்குரோஸ்
- கரும்பில் சேமிப்பு வெல்லம் - சுக்குரோஸ்

**பல்சக்கரைட்டுகள்**

a) **சேமிப்புப் பல்சக்கரைட்டுகள்**

- தாவரங்களிலும் குளோரபைற்றாக்களிலும் மாப்பொருள் சக்தி மூலமாக குளுக்கோசைச் சேமிக்கின்றது.
- விலங்குகளிலும் பங்கசுக்களிலும் கிளைக்கோஜன் சக்தி மூலமாக குளுக்கோசைச் சேமிக்கின்றது.
- Dhalia முகிழுருக்களில் இனூலின் சக்தி மூலமாக பிரக்டோசைச் சேமிக்கின்றது.

b) **கட்டமைப்பிற்குரிய பல்சக்கரைட்டுகள்**

- தாவரங்களினதும் குளோரோபைற்றாக்களினதும் கலச்சுவரில் உள்ள செலுலோஸ்
- தாவர இழையங்களின் நடுமென்றட்டிலுள்ள பெக்டின்.
  தாவரக்கலச்சுவர்களில் உள்ள அரைச்செலுலோஸ்
  புரோகரியோட்டாக்களின் கலச்சுவர்களில் உள்ள பெப்ரிடோகிளைக்கன்.
- பங்கசுக்களின் கலச்சுவர்களிலும் ஆத்துரப்பொட்டுகளின் புறவன்கூட்டிலும் உள்ள கைற்றின்.

பக்க அனுசரணை



# ‘கல்வி கற்பதன் நோக்கம் சமூகத்தைவிட்டு விலகுவதற்கல்ல’

## அரங்கத்தின் செயலமர்வில் வலயக் கல்விப் பணிப்பாளர் ரவி





‘உதவியைப் பெற்றுக் கல்வியைக் கற்றுக்கொண்ட பின்னர் தான் சார்ந்த சமூகத்தை நேசிக்காமல் சமூக வளர்ச்சியில் பங்குகொள்ளாமல் தானும் தன் குடும்பமும் வாழந்தால் போதும் என்கின்ற விழுமியமற்ற போக்கில் போகின்றவர்களைப் போல மாணவர்களாகிய நீங்கள் போய்விடாமல் நீங்களும் உயர்ந்து, உங்கள் சமூகத்தையும் உயர்த்த நீங்கள் கற்ற கல்வியைப் பயன்படுத்த வேண்டும்’ என்றார் கல்குடா வலயக் கல்விப்பணிப்பாளர் தினகரன் ரவி.

2019இல் க.பொ..த(உ.த) பரீட்சையில் தமிழ்ப் பாடத்துக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கு, எமது “அரங்கம்” பத்திரிகையின் அனுசரணையுடன் நடைபெற்ற செயலமர்வில் கலந்துகொண்டு மேலும் பேசும் போது அவர், ‘தேவையுள்ள இடத்தை இனங்கண்டு தேடிவந்து கல்விக்கண் திறக்கும் பணியைச் செய்யும் அரங்கம் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் திரு. பூ.சீவகன் மற்றும் அவரது துணைவியார் திருமதி பரமேஸ்வரி சீவகன் அவர்கட்கும் இச்செயலமர்வை முன்னின்று ஒழுங்குசெய்து தந்தவரும் இங்கு வளவாளர்களுள் ஒருவராக இருப்பவருமான திரு.த.யுவராஜன் உள்ளிட்ட அனைவருக்கும் நன்றியையும் தெரிவித்தார்.

இச்செயலமர்வு, மட் / பாற்சேனை தமிழ் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. இவ்வித்தியாலய அதிபர் பொன். இராமச்சந்திரன் இச்செயலமர்வை இனிதே முடித்துவைத்துப் பேசும் போது, என்னுடைய ஆசிரியர்கள் இருவர் இங்கு வளவாளர்களாக வந்திருப்பதும்; சுமார் 55 வருடங்களின் பின்னர் பேராசிரியர் ஒருவரின் பாதம் இவ்வித்தியாலயத்தில் பட்டடிருப்பதும் மிகவும் பெருமையாக இருப்பதாகத் தெரிவித்தார். அதற்கு வழிசமைத்த அரங்கம் பத்திரிகைக்கு நன்றியும் சொன்னார்.

இச்செயலமர்வில் மட்/ பாற்சேனை தமிழ் மகா வித்தியாலய மாணவர்கள் அப்பாடசாலையின் ஆசிரியர் திரு. ஜெயரஞ்சித் அவர்களின் வழிகாட்டலிலும் மட்/ வாகரை மகா வித்தியாலய மாணவர்கள் அப்பாடசாலையின் ஆசிரியை திருமதி ரி.தசாகரன் அவர்களின் வழிகாட்டலிலும் அக்கறையுடன் கலந்து கொண்டதுடன் இப்படிப்பட்ட செயலமர்வுகளை மேலும் நடத்துவதற்கு “அரங்கம்” பத்திரிகை நிறுவனத்தார்க்கு வேண்டுகோளும் விடுத்தனர்.

இச்செயலமர்வில் வளவாளர்களாக கலாநிதி செ. யோகராசா அவர்களும் த.யுவராஜன் அவர்களும் செயற்பட்டார்கள். இச்செயலமர்வு சிறப்பாக முன்னெடுக்கப்பட்டமைக்கு கர்த்தாக்களாக இருந்த ஒவ்வொருவருக்கும் கல்குடா கல்வி வலயத்தின் தமிழ்ப்பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. தட்சணாமூர்த்தி அவர்கள் நன்றி தெரிவித்துப் பாராட்டினார்.

தொடர்ச்சி... (பக்கம் -15 )






தொடர்ச்சி...

## ‘போடியார் மாப்பிள்ளை ‘தந்த எஸ்.ஜோன்ராஜனின் மற்றுமொரு படைப்பு -- ‘கிராமத்து அத்தியாயம்’’

மக்களின் பேச்சு வழக்கு ஆழமாய் வேரூன்றி இருக்கலாம். நாற்பது அத்தியாயங்கள் ஆயினும் கதைக்காக அன்றி பக்கங்களுக்காகவே அவை பிரிக்கப்பட்டன போல உள்ளது. தற்போது அம்பாறை மாவட்டவாசியான படைப்பாளி தான் வேலை செய்த அந்த இனிமையான நாட்களில் இருந்து மீள முடியாத துயரின் வெளிப்பாடே இப்படைப்பு. படைப்பு உருப்பெற்று மாங்கேணி கிராமத்தின் வரலாற்றையும் வாழ்வியலையும் எம் கண்முன்னே கொண்டு வந்து நிறுத்துகிறது. கடற்றொழில் கூட்டுத்தாபன அதிகாரியின் பணி, விதானையாரின் பணிகள் தம் பணிகளுக்கு அப்பால் எம் மக்களுடன் இரண்டறக் கலந்துள்ள விதம் அலாதியானது. சமூகம், கலாசாரம், பொருளாதாரம் மாற்றம் அடையும் / வீழ்ச்சி அடையும் /வளர்ச்சியுறும் விதம் பதிவு பெறுகிறது. அதன் மாற்றங்களை இன்று உணர்ந்து மாறி அதற்கேற்ப வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.
எனினும் கிழக்கிலங்கை நல்ல நாவலை எதிர்பார்த்தவண்ணமே உள்ளது. நாவல் ஒரு பிரசார பீரங்கி என்பது இந்நாவலும் நிரூபிக்க இறுதியில் முயல்கிறது.

ஒரு கிராமத்தின் அத்தியாயம் இன்னும் பல அத்தியாயங்களைத் தர நிறைய கதைகள் உண்டு. வாழ்த்துக்கள்.







தொடர்ச்சி...

## மட்டு. உறுகாமம் பிரிவு நீர்பாசன திட்டத்தின் 8698 ஏக்கரில் ...

ஊரருகு வெல்லங்குடா கண்டம் 165 ஏக்கர், பள்ளத்து வெளி கண்டம் 670 ஏக்கர், பெருவெளி கண்டம் 795 ஏக்கர், சின்னவெளி, சின்னாளள்வெளி புதுவெளிக்குளத்துவட்டை கண்டம் 900 ஏக்கர், குளத்துவட்டை கண்டம் 500 ஏக்கர், பாலாமடு வடக்கு கண்டம் 302 ஏக்கர், பாலாமடு தெற்கு கண்டம் 291 ஏக்கர், தொடுவில்சோலை கண்டம் 600 ஏக்கர், பளவெட்டுவான் கண்டம் 280 ஏக்கர்,தளவாய் கண்டம் 165 ஏக்கர், செய்கை பண்ணுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.
கித்துள்வெள குளத்தின் மூலம் 470 ஏக்கரிலும், வெலிக்காகண்டிய குளம் 400 ஏக்கரிலும் சிறிய நீர்பாசன குளங்களின் நீர்ப்பாசன வசதியுடன் சிறுபோக நெற் செய்கை மேற்கொள்வதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி...


## கரைவாகு வடக்கு நகரசபை உருவாக்கமும் சாய்ந்தமருது பிரதேசசபை உருவாக்கமும் கல்முனைத் தமிழர்களுக்கு பெரும் ஆபத்தானவை

அது முழு அளவிலான பிரதேச செயலகமாக தரமுயர்த்தப் பெறவில்லை. அதாவது முழுமையான அதிகாரமளிக்கப்படாமல் எல்லைகள் வகுக்கப்பெற்று வர்த்தமானியில் பிரசுரிக்கப்பெறாமல் அதிகாரமற்றதோர் உபபிரதேச செயலாளர் பிரிவாக பெயரளவிலேயே கல்முனைத் தமிழர்களுக்கு கண்துடைப்பு நடவடிக்கையாகவே இயங்கி வருகிறது. ஆனால் சமகாலத்தில் சாய்ந்தமருதுக்கென தனியான பிரதேச செயலகபிரிவு (நிர்வாக அலகு) ஏற்படுத்தப்பெற்று இயங்கி வருதுகின்றது இதனை அடிப்படையாக வைத்தே இப்போது சாய்ந்தமருதுக்கென தனியான உள்ளூராட்சி அலகொன்றினை (பிரதேச சபை) ஏற்படுத்தும் முயற்சி அப்பகுதி முஸ்லீம்களிடையே முனைப்பு பெற்றுள்ளது.

இப்பின்னணியில் வைத்துப்பார்க்கும் போது தற்போது முழுக்கல்முனைத்தேர்தல் தொகுதியானது சாய்ந்தமருது பிரதேச செயலாளர் பிரிவு, கல்முனைத்தெற்கு(முஸ்லிம்) பிரதேச செயலாளர் பிரிவு இதுவரை தரமுயர்த்தப்படாத கல்முனை வடக்கு(தமிழ்) பிரதேச செயலாளர் பிரிவு ஆகிய நிர்வாக அலகுகளை உள்ளடக்கியதாகவும் அதேவேளை கல்முனை மாநகர சபை எனும் தனியான ஒற்றை உள்ளூராட்சி அலகாகவும் உள்ளன.

இப்படியிருக்கும் போது கல்முனைத் தமிழர்களுக்கென தனியான தமிழ் பெரும்பான்மை அலகு கோரிக்கை நிறைவேற்றப்படாமல் அதற்கு முன்பு சாய்ந்தமருதுக்கான தனியான உள்ளூராட்சி அலகுக் கோரிக்கை நிறைவேறினால் தமிழர்களின் நீண்ட நாள் கோரிக்கை நீர்த்துப்போய் விடக்கூடிய அல்லது முற்றாக அடிபட்டு போகக்கூடிய ஆபத்து உள்ளது. அதேபோன்றுதான் அண்மையில் மாற்றத்துக்கான எழுச்சி முன்னணியின் இயக்குனரான மருதமுனையைச் சேர்ந்த சட்டத்தரணி எம்.ஐ.றைசால் ஹாதி முன்வைத்துள்ள கோரிக்கையின் படி (வீரகேசரி 09.02.2019) பாண்டிருப்பு, மருதமுனை, பெரியநீலாவணை ஆகிய பிரதேசங்களை உள்ளடக்கியதாக கரைவாகு வடக்கு நகரசபை உருவானாலும் கல்முனைத்தமிழர்களின் நீண்டநாள் கோரிக்கை நீர்த்துப்போய்விடக்கூடிய அல்லது முற்றாக அடிபட்டு போகக்கூடிய ஆபத்து உள்ளது.

மேலும் மேற்படி இருகோரிக்கைகளும் அதாவது சாய்ந்தமருது பிரதேசசபையும் கரைவாகுவடக்கு நகரசபையும் தற்போதுள்ள கல்முனை மாநகரசபையில் இருந்து தனியே பிரிக்கப்பெற்று உருவானால் எஞ்சியிருக்கப்போகின்ற கல்முனை மாநகரசபையின் கீழ் தெற்கில் தற்போதைய தரவைப்பிள்ளையார் கோவில் வீதிக்கும் வடக்கில் கல்முனை-பாண்டிருப்பு எல்லை வீதியான தாளவெட்டுவான் வீதிக்கும் இடையில் உள்ள கல்முனைத் தமிழர்கள் காலவரையில் காணாமல் போய்விடுவார்கள்; மட்டுமல்ல 1946ஆம் ஆண்டின் 3ம் இலக்க பட்டின சபைகள் கட்டளைச்சட்டத்தின் பிரகாரம் 1948இல்




கல்முனைபட்டின சபை (town council) உருவாக்கப்பெற்ற காலத்தில் இருந்து அதாவது 1892 ஆண்டின் 18ஆம் இலக்க கட்டளைச் சட்டத்தினால் நிறுவப்பெற்ற கல்முனைத் தனித்தமிழ் உள்ளூராட்சி சபையில் (சுகாதார நலன் பேணும் சபை – Sanitory board) அடங்கியிருந்த கல்முனை மூன்று தமிழ்குறிச்சிகளும் முஸ்லீம் கிராமமான கல்முனைகுடியின் ஐந்து குறிச்சிகளும் இணைக்கப்பெற்று ஏழுவட்டாரம் கொண்ட முஸ்லிம் பெரும்பான்மை கல்முனை பட்டினசபையாக உருவாக்கப்பெற்ற காலத்திலிருந்து கல்முனைத் தமிழர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பெற்ற பாராபட்சங்கள் யாவும் உத்தேச கரைவாகுவடக்கு நகரசபையின் கீழ்வரும் பாண்டிருப்பு மற்றும் பெரியநீலாவணை மக்களுக்கு இழைக்கப்படும்.

இத்தகையதொரு பின்புலத்தில் கல்முனைப் பிரதேசத் தமிழர்கள் தங்கள் இருப்பை தற்காத்துக் கொள்வதற்கான ஒரேயொரு மார்க்கம் யாதெனில், கல்முனைத் தமிழர்களுக்கென தெற்கே தரவைப்பிள்ளையார் கோவில் வீதியையும் வடக்கே மட்டக்களப்பு மாவட்டத்தின் தெற்கு ல்லைக்கோட்டையும்(பெரியநீலாவணை வரை) கிழக்கே வங்காள விரிகுடா கடலையும் மேற்கே கிட்டங்கி வாவியையும் எல்லைகளாக கொண்ட தமிழ்ப் பெரும்பான்மை உள்ளூராட்சி அலகொன்றினை (அது பிரதேச சபையாகவோ அல்லது நகரசபையாகவோ அல்லது தனியான மாநகரசபையாகவோ இருந்துவிட்டுப்போகட்டும்) ஏற்படுத்திக்கொள்வதேயாகும். இதனைப்பெற்றுக்கொள்ள உடனடியாக தேவைப்படுவது கல்முனை வடக்கு(தமிழ்) பிரதேச செயலாளர் பிரிவைத் தரமுயர்த்துவதாகும். கல்முனை வடக்கு(தமிழ்) பிரதேச செயலாளர் பிரிவைத் தரமுயர்த்தப்பெற்றால் மட்டுமே அதனை அடிப்படையாகவைத்து தனியான உள்ளூராட்சி அலகு அமைய வாய்ப்புண்டு.

இதனைப் பெற்றுத்தருவதற்கான அக்கறையோ-அர்ப்பணிப்போ-ஆற்றலோ-ஆளுமையோ-அதற்கான அரசியல் வல்லமையோ தற்போதைய தமிழர்தம் அரசியல் தலைமையிடம் இல்லை. கடந்த உள்ளூராட்சி அதிகாரசபைகளுக்கான தேர்தல் காலத்தில் கல்முனைக்குடியிருந்து 'உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் முடிந்து இரு வாரங்களுக்குள் கல்முனை வடக்கு(தமிழ்) பிரதேச செயலாளர் பிரிவைத் தரமுயர்த்தித்தருவேன்" என்று வாக்குறுதியளித்து வாக்குக்கேட்டுப் பெற்ற தமிழ் தேசியக்கூட்டமைப்பின் தலைவன் இரா.சம்பந்தன் அவர்கள் அதுபற்றி மறந்துவிட்டார் போலும். எனவே 'அழுதும்பிள்ளை அவளே பெறவேண்டும்' என்பதற்கிணங்கக் கல்முனைத் தமிழர்களிடையே உள்ள பொது மக்கள் அமைப்புக்கள் அதற்கான அரசியல் களவேலைகளையும் வெகுஜன அழுத்தங்களையும் தாமதியாது தொடங்க வேண்டும். முன்னரே உத்தேச சாய்ந்தமருது பிரதேசசபையும், கரைவாகுவடக்கு நகரசபையும் உருவாகிவிடுமானால் கல்முனைத் தமிழர்களின் தனியான தமிழ்ப் பெரும்பான்மை உள்ளூராட்சி அலகுக் கோரிக்கை அடிபட்டு போய்விடும். கண்கெட்டபின் சூரிய நமஸ்காரம் பண்ணமுடியாது.




Printed at Express News Papers (Cey) Ltd and Published by Arangam News (Pvt)Ltd No 227 Bar Road Batticaloa